T. N. Chandrasekaran.

# SRIPATY'S
# PRACTICAL HOROSCOPY.

ஸ்ரீபதியின் அனுபவ ஜாதகம்.

## TAMIL EDITION.

FIRST PART.

*By*

MISS INDIRA SRIPATY

*Reprint from*

*The "Sothidaparipalini."*

PRINTED AT

THE SOTHIDAPRAKASA PRESS

KOKUVIL.

Copy Right.] 1937.

ஸ்ரீபதி

# அனுபவ ஜாதகம்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை

ஜோஸ்யர் ஸ்ரீபதி அவர்கள்

ஆங்கிலத்தில் எழுதியதை அனுசரித்து

ஜெஷியார் புத்திரி

இந்திராதேவியால்

தமிழில் எழுதப்பெற்று

கொக்குவில்

சோதிடப்பிரகாச யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பெற்றது.

Copy Right.] 1937. [

# பதிப்புரை

இந்த அனுபவ ஜாதகமானது என் தந்தையாரால் அன்னிய நாடுகளில் வசிக்குங் காலத்து எழுதப்பெற்றது புஸ்தக ரூபமாக ஆங்கிலத்தில் அச்சிடப்பெற்று, எமக்கு அனுப்பப்பட்ட காப்பியைப் பார்த்தவர் தமிழிலும் இவ்வகையாக எழுதப்பட்டாலோ என விரும்பியதைப் பார்த்துத் தமிழில் இதனை எழுதலானேன். இது மொழிபெயர்ப்பல்ல. சாஸ்திரசம்பந்தமான நூல்களை மொழிபெயர்த்தால் பாஷைகளுக்கு ஏற்பட்ட வித்தியாசத்தினுல் சிறப்படையாது. ஆதலின், இந்நூலில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டதன் சாரம் தமிழ்ப்பாஷை மூலமாக எழுதப்பட்டிருக்கிறது என் தந்தையார் எங்களுக்கு ஆகவேண்டிய வழிகளைக் காட்டிவிட்டுத் தமக்கேற்ற கீர்த்தியைச் சம்பாதித்துக்கொண்டு ஸந்நியாசம் பெற்றுக்கொண்டமையால், முன்போல் அவர்கள் அபிப்பிராயங்களைத் தாராளமாகக் கேட்டுக்கொள்வது இப்போது அரிதாதல்பற்றி இச்சிறு புஸ்தகம் என் சகோதர சகோதரிகளுக்கு மிக உபயோகமாக இருக்குமென்று நினைக்கிறேன். இதைத் தடவுடன் முதலில் சோதிடபரிபாலினியிலும், பின் புஸ்தக ரூபமாகவும் வெளியாக்கிய பிரம்மஸ்ரீ இரகுநாதையரவர்களுக்கு நான் நன்றிபாராட்டுகின்றேன். இன்னும் மாதுஸ்ரீ அமிர்தவல்லிஅம்மாளின் ஞாபகத்துக்கு இதைச் சமர்ப்பிக்கின்றேன்.

இங்ஙனம்

இந்திராதேவி.

# முகவுரை

ஜாதக விஷயத்தில் உபயோகமானதும் இலகுவானதுமான ஓர் நூலைத் தேவைப்படுவோரது குறையை நிவாரணம் செய்ய இந்த நூலை எழுதுகிறேன். என்னுடைய தந்தையார் நீங்களெல்லோரும் அறிய அதிக கீர்த்திவாய்ந்த ஜோஸ்யராய் இருந்தார். இவ்விஷயத்தில் தன் அனுபவத்தை அவர் எனக்குக் கொடுத்தார். மலாய்நாடு, பர்மா, இந்தியா, இலங்கையிலுள்ள நம்மை ஆதரிப்பவர்களுக்கு என் தந்தையாரது ஆராய்ச்சியோடு சேர்ந்த என் அனுபவங்களும், நான் தனியே பார்த்தவைகளும் இன்றியமையாதனவாக இருத்தல் கூடும். மற்றையோர்களுடைய அபிப்பிராயங்களுக்கு ஆளாகாதபடி என் மேஜையிலிருந்து இதை எழுதும்போது அன்னிய கர்த்தாக்களின் நூல்களை விலக்கிவைத்தேனாதலால் இந்நூல் முற்றுப்பெறும்போது, அறுபது வருஷத்திற்குமேல் உக்கிரமான போட்டியென்னும் பிரசண்டமாருதத்தை எதிர்த்துநின்றதும், முதியோரிலிருந்து சிறியோருக்கு அல்லது தந்தையிலிருந்து புதல்வருக்குக் குருசிஷ்ய பரம்பரையாகக் கொடுக்கப்பட்ட நூற்றாண்டுக்குக்கிட்டிய கல்வியின் பயனுமாகும். இவ்விஷயங்களில் நேரம் போக்காதபடி நேரே விஷயத்தில் பிரவேசிப்போம்.

உதயலக்கினம் ஒருவனுடைய சீவியத்தை ஆராய்வதற்கு மிக உபயோகமானது. இராசிமண்டலம் பன்னிரண்டாகப் பிரிக்கப்படுவது. ஓர் வட்டம் முன்னூற்றறுபது பாகை கொண்டதாதலால் பன்னிரண்டிலொன்றான இலக்கினம் முப்பது பாகை கொண்டது. இந்த இராசிகளுக்கு, திவ்விய திருஷ்டியுள்ள நம் முன்னோர்கள் அவ்வவ் விலக்கினத்தில் ஜனித்தவனுக்குப் பின்னால் வரப்போகிற குணாதிசயங்களுக்கேற்ப நாமங்களையும் சின்னங்களையும் ஏற்படுத்தினர். இதில் அபிப்பிராயபேதமும் உண்டு. இந்த ரூப நாமங்கள் ஒவ்வொரு இராசியும் அடக்கியிருக்கும் நக்ஷத்திரக் கூட்டங்களைக் கண்ணுக்கும் புத்திக்கும் விளக்குவதெனவும் சொல்வர். ஜோஸ்யத்தின் தத்துவார்த்தம் இப்போது நம் நோக்கம் அல்லாமைபற்றிக் கூறியதற்குமேல் நாம் இவ்விஷயத்தில் பிரவேசிக்கவில்லை. எப்படியும் சூரியனுடைய ஓர் வருஷ பாதை பன்னிரண்டு இராசிகள் கொண்டதென முடித்துவிடுவோம். ஒரு மாசத்தில் பிறந்த குழந்தை அம் மாதத்தில் சூரியனுக்கேற்பட்ட இராசியின் குணம் கொண்டதாகும். நமதுதேச முறைப்படி சூரியனானவன் ஆங்கிலமாத நடுக்கூற்றிலே ஓர் இராசியில் பிரவேசிக்கிறான். மாசங்களின் நாட்கள் பேதப்படுவதுபோல இராசிகளின் பிரமாணங்களும் பேதப்படுவது இயல்பு. இதை இலகுவாகக் காட்டுவாம். சித்திரைமசத்தில் சூரியன் மேஷத்தில் பிரவேசித்துச் செல்லுகிறான். அவ்வண்ணமே வைகாசியில் இடபத்திலும், ஆனியில் மிதுனத்திலும், ஆடியில் கடகத்திலும்; ஆவணியில் சிங்கத்திலும், புரட்டாதியில் கன்னியிலும், ஐப்பசியில் துலாத்திலும், கார்த்திகையில் விருச்சிகத்திலும், மார்கழியில் தனுசிலும், தையில் மகரத்திலும், மாசியில் கும்பத்திலும்,

பங்குனியில் மீனத்திலும் ஆகும். அந்த மாசத்து இராசியே அந்த மாசத்துக் காலையில் உதயமாகும். தினசரி பன்னிரண்டு இலக்கினமும் ஏறக்குறைய ஐந்து நாழிகைக்கு ஒரு இலக்கினமாக ஏற்படுவதுமில்லை. இது பூமியில் வசிக்கின்ற சிறுதொகையானோருக்கே பொருந்தும். கிறீன்விச்சில் மேடத்துக்கு ஏறக்குறைய ஒரு மணி நேரமும், போர்ட் எலிசபேத்தில் இரண்டு மணி நேரத்திற்குக் கிட்டவும் இருப்பதையும், கர்க்கடகம் இரண்டேமுக்கால் மணியும் ஒன்றரை மணியுமாக முறையே ஏற்படுவதையும் யோசிக்க நம்மவருக்கு நூதனமாக விருக்கும்.

இப்படியே கூறப்பட்ட இரண்டுமணிக்கு ஏற்பட்ட நூற்றிருபது மினிற்றில், ஏகசேட்டிற்கு முப்பது நாட்களுக்குப் பிரித்தால் தினசரி நாலு மினிற் காலை இலக்கின இருப்பில் குறைந்துகொண்டே போகும். சித்திரைமாசம் முதலாம் திகதி மேடராசியில் இருப்பு ஒருபங்கு ஏற்பட்டால் பதினைந்தாந் திகதி அரைப்பங்கே இருக்கும். அப்படியே கடைசித் திகதியில் மூன்று மினிற்றுக்குட்படத்தான் ஏற்படும். இவ்விதமாக மாசத்துக்குரிய இலக்கினத்தில் உதயத்தின்மேல் இருப்பு சுத்தமான பஞ்சாங்கங்களில் காட்டப்பட்டிருக்கின்றன. ஒரு இலக்கினம் முடிந்தவுடன் அடுத்த இராசி நடந்து கழியும். இந்தக் கஷ்டங்களெல்லாம் காலை இலக்கினத்தில்தான் ஏற்படுவன. நமது ஜோஸ்யர்கள் தொழில் நடத்தும் மார்தலைக்கும் சிங்கப்பூருக்கும் இடையிலேயே இராசிப்பிரமாணங்கள் எவ்வளவோ பேதமடைகின்றன. சுத்த இராசிப்பிரமாணங்களையும் காலை இலக்கின முடிவையும் சுத்த பஞ்சாங்கங்களிலேயே பார்த்துக்கொள்வது சுலபமாகும். ஒருவருக்கு இலக்கினங்களில் சந்தேகமுண்டானால் ஜாதகியின் குணாதிசயங்கள் தெளியக் காட்டும். தைரியமான பெருமைக்கு உறைவிடமான பயமற்ற பூரண சுயநம்பிக்கையுள்ள மேடலக்கினத்திற் பிறந்தோன், உங்களெல்லாரையும் இருதயத்துள்ளே சிரித்து அற்பமாக மதிக்கின்ற பொறுமைவாய்ந்த ஆராய்வுள்ள மிருதுவான நடையுள்ள காத்திரமான , இடபலக்கினத்திற் பிறந்தோனென ஒருபோதும் மதிக்கப்படமாட்டான். சாஸ்திராராய்ச்சித்திறமையுள்ள மிதுனலக்கினத்திற் பிறந்தோன், அழுங்குப்பிடியுள்ள பொறுப்பை வெறுக்கும் கடகலக்கினத்திற் பிறந்தோனாகமாட்டான். ஸினேக குணமுள்ள சிங்கலக்கினத்திற் பிறந்தோன், ஆங்கில சரித்திர கதாநாயகனான றிச்சாட் அரசன் போல்வான்; கன்னிகையின் ஸ்வரூபம் மறைந்து கிடக்கும் கன்னிலக்கினத்திற் பிறந்தோன் ஆகமாட்டான். உலகஅறிவு பூரணமாக நிறைந்தவனுக்கு இவ்வித இலக்கின பலன் முதலிய குறிசொல்லல் இஷ்டமிருக்காதாதலின், நூல் முடிவில் இவற்றைக் கூற நினைந்திருக்கிறேன். தன்னுடைய ஜாதகத்தைப் பல ஜோஸ்யர்களிடமிருந்து பல முறையும் பார்த்துக்கொண்டவன் இலகுவில் குறிசொல்லக்கூடியவனாவான். அதன் பெறுபேறாக, நடந்த கஷ்டகாலத்தின் பயனாகப் பல ஜோஸ்யர்களிடமிருந்தும் பலாபலன்



கேட்டுத் திரிந்தவர்கள் இன்று ஜீவனார்த்தத்திற்காக ஜோஸ்யத்தைத் தொழிலாகக் கொண்டமை வெளிப்படையாகத் தெரிகிறது. பல முறையும் பரீக்ஷையில் தவறியவர்கள் மற்றைய பரீக்ஷை எடுப்பவர்களுக்கு உபயோகமாகும்பொருட்டுத் தமக்குக் கிடைத்த கேள்விகளெல்லாவற்றையும் சேர்த்துத் திரட்டி அச்சிட்டிருப்பதை நான் மாணவனாக இருக்குங் காலத்தில் பார்த்திருக்கிறேன். இவ்விதப் பிரசுரங்களை வாசிப்பதனால் பாரிய நூல்களை வாசிப்பதிலும் இலகுவாகப் பரீக்ஷகர்களைத் திருப்தி செய்யக்கூடும். தற்கால ஜோஸ்யரின் நோக்கமும் இதுபோன்றதே. "உனக்கு ஸங்கீத நிருத்தாதிகளில் விருப்பம். உனக்குக் கலைகளில் விருப்பம். உனக்கு அபூர்வ சக்திகள் மறைந்து கிடக்கின்றன. அவைகளை நீ வெளிக்கிளப்பக் கூடும். அநேக காரியங்களை ஏற்படுத்தும் சக்தி உனக்கு இருக்கிறது. பாரிய சத்துருக்கள் இருக்கிறார்கள். ஆனால், அவர்கள் உன்னை ஜயிக்கமாட்டார்கள். விவாக காலத்துத் தொல்லை ஏற்படக்கூடிய ஜாதகம் இது. பொருள் நஷ்டம் உண்டு. எட்டாங்கட்டளையும் கிட்டும்." இவ்விதமான குறிகளைச் சொல்லி விவரமாகப் பார்த்து நல்வழி காட்டிவிடுதற்கு இன்னுமொரு சிறுதொகைப் பணமும், நன்மை பயக்கும் மந்திர யந்திர கவசங்கட்கு அதிலும் கூடிய தொகையும் கவரப்படுகின்றன.

இதன் பயனாக, நாகரீகமுற்ற தேசங்களில் மனிதர்கள் இவ்விதமான சாஸ்திரசாதனைகளைத் தடுத்து நியாயப்பிரமாணங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மலாய்நாட்டிலே 1928-ம் ஆண்டின் 12-ம் நம்பர்ச் சட்டம் பின்வருமாறு கூறுகின்றது:— யாராவது குறி, ஜோஸ்யம், கைரேகை, வருங்காலம் சொல்வதாக ஏமாற்றினால் ஐம்பது வெள்ளிக்குக் குறையத் தண்டம் பெறுவார். அவ்வூரில் ஜோஸ்யம் சொல்லுவதும் குற்றம்.

பூர்வீகக் குரவர்கள் வருங்காலம் சொல்ல முடியாமையை அங்கீகரித்துக்கொண்டனர். நாம் இதற்குப் புறநடையா? ஒருகாலத்து இவனுக்கு அஜீர்ணரோகம் உண்டாகுமென்றும், ஆகாரபானாதிகளில் கவனமாக இருக்கும்படியும் நாம் சொல்லிவிடலாம். இவ் விஷயத்தில் எப்போதும் ஒருவன் ஜாக்கிரதையாக இருக்க முடியாது. ஒருவன் தான் எப்போதும் தன்னைக் கவனமாகப் பார்க்கக்கூடுமானால் அவனுக்கு அல்லவே என் புத்திமதி. நீ ஒரு தேசத்தின் பிரமாணத்தை மீறினால் உன்னைப் பாதுகாக்க நீ ஒரு நியாயதுரந்தரரிடம் போகிறாய். உனக்கு வசதிக்குறைவு ஏற்படும்படி இன்னொருவன் பிரமாணத்தை மீறினாலும் நீ நியாயவாதியிடம் போகிறாய். ஒவ்வொருவனும் நியாயப்பிரமாணத்தின்படி நடக்கக் கற்றுக்கொண்டால் நியாயப்பிரமாணிக்கும் நமக்கும் வேலையில்லை. நீ சுகாதார முறைப்படி நடந்தால், வைத்தியனுக்கும் உனக்கும் வேலையில்லை.

நம் பூர்வீகர்களுக்கு ஜோதிஷசாஸ்திரம் காலக்ஞானமென அறியப்பட்டிருந்தது. அறுபது விநாடி கொண்டது ஒரு நாழிகை. அறுபது நாழிகை கொண்டது ஒரு நாள். இந்த நாளை ஆங்கிலேயர்கள்

இருபத்துநாலு மணி நேரங் கொண்டதென மதிப்பர். இவ்விதமாகக் கணிக்கும்போது இருபத்துநாலு ஆங்கில மினிற் கொண்டது நமது ஒரு நாழிகை. இந்துக்கள் தங்கள் நாளை ஆறு மணிக்கு ஆரம்பிப்பதில்லை. அவர்கள் நாள் சூரிய உதயத்தில் ஆரம்பிப்பது. இதனால் சூரியன் எப்போதும் ஆறு மணிக்கு உதிப்பதல்ல என்பதும் பெறப்படும்.

காலத்திற்கு மூலாதாரமானது சுவாசமே. மேலத்தேசத்தவர்கள் ஒரு மனிதன் பதினாறு சுவாசம் ஒரு மினிற்றில் விடுகிறானெனச் சொல்லுகிறார்கள். நம் முன்னோர்கள் கணக்கின்படி இது பதினைந்தாகும். சாஸ்திர சமாசக் கட்சியைச் சேர்ந்தவனாக அது சரி, இது பிழையென நான் சொல்ல முடியாது. பூர்வீகர்களின் சீவியமும் ஆகாரமும் கூடிய காலத்தில் குறைந்த சுவாசத்தை நடப்பித்தது. தற்கால நாகரீகத்தில் ஈடுபட்டவர்களுக்குச் சுவாசத் தொகை ஏறுகின்றது. நம் முன்னோர்கள் முன்னூற்றறுபது நாட்கள் கொண்ட நூற்றிருபது வருஷங்கள் மனுஷனுடைய பூரண ஆயுளென விதித்திருந்தனர். ஒரு நிமிஷத்தில் பதினைந்து சுவாசமாக ஒரு மணி நேரத்தில் 900 சுவாசமும், இத் தொகையை ஒரு தினத்திலுள்ள மணிக்கணக்கான இருபத்து நாலால் பெருக்க நாளொன்றுக்கு 21,600 சுவாசமும், இதை முப்பதால் பெருக்க மாசத்தொகையும், அதைப் பன்னிரண்டால் பெருக்க வருஷத்தொகையும், அதை நூற்றிருபதால் பெருக்க, பூரண ஆயுஸுக்குரிய சுவாசத் தொகையான 93,31,20,000-ம் பெறப்படும். கிரமமற்ற நடையினாலும் அசுத்தமான நினைவுகளாலும் சீக்கிரத்தில் சுவாசம் கழிந்துபோகத் தேகமும் சீக்கிரத்தில் அழிந்துபோகின்றது.

இந்த நூற்றிருபது வருஷங்களும் சூரியனுக்கு ஆறு, சந்திரனுக்குப் பத்து, செவ்வாய்க்கு ஏழு, இராகுவுக்குப் பதினெட்டு, வியாழனுக்குப் பதினாறு, சனிக்குப் பத்தொன்பது, புதனுக்குப் பதினேழு, கேதுவுக்கு ஏழு, வெள்ளிக்கு இருபது எனப் பகுத்து ஆட்சி செய்யப்படும். இந்தத் திசைகளுக்குப் புத்தி, சித்திரங்கள் என்னும் சூக்ஷ்மப் பிரிவுகளும் உண்டு. உதாரணமாக: புத்திவகையில் சூரியனில் சூரியனுக்கு மூன்று மாசம் பதினெட்டு நாளாகிய குறைந்த காலமும், சுக்கிரதெசை சுக்கிரபுத்திக்கு அதிகம் கூடிய தொகையான மூன்று வருஷம் நாலு மாசமும் ஏற்படும். மற்றைய புத்தி சித்திரங்களெல்லாம் திரைராசிகரீதியாய் இத்தொகைகட்கு உட்பட்டனவே.

இந்நூலிலே 9×9=81 புத்திகளையும், நீங்கள் விலகிக்கொள்ளக்கூடிய தீங்குகளையும், காத்திருக்கக்கூடிய லாபங்களையும், தேகசுபாசுபங்களையும், ஒத்துழைப்பு போட்டி முதலானவற்றையும், வறுமை செல்வங்களையும் கூறுவேன். இடையிடையே நம்மவர் கஷ்டகாலத்தை எவ்வழிவகையால் வென்றனரென்றும், வேறு சிலர் அறியாமையால் அமிழ்ந்தினரென்றும் கூறுவேன்.

24—3—29. ஸ்ரீபதி.

கோலாலம்பூர்.

உ

# ஸ்ரீபதி அனுபவ ஜாதகம்.

(1-ம் பாகம்.)

அச்சுவினி, மகம், மூலம்.

## கேது மகாதெசைவருஷம் 7.

| புத்தி | வருஷம் | மாதம் | நாள் | மொத்தம் வருஷம் | மொத்தம் மாதம் | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|
| கேது | 0 | 4 | 27 | .. | ... | ... |
| சுக்கிரன் | 1 | 2 | 0 | 1 | 6 | 27 |
| சூரியன் | 0 | 4 | 6 | 1 | 11 | 3 |
| சந்திரன் | 0 | 7 | 0 | 2 | 6 | 3 |
| செவ்வாய் | 0 | 4 | 27 | 2 | 11 | 0 |
| ராகு | 1 | 0 | 18 | 3 | 11 | 18 |
| வியாழன் | 0 | 11 | 6 | 4 | 10 | 24 |
| சனி | 1 | 1 | 9 | 6 | 0 | 3 |
| புதன் | 0 | 11 | 27 | 7 | 0 | 0 |

### கேதுமகாதெசை பலன்.

ஜோஸ்யத்தில் நம்பிக்கையுள்ளவர்களும், கிரகங்களின் நடப்பினால் ஏற்படும் நன்மைதீமைகளை அறிதல் அவசியமென அபிப்பிராயமுள்ளவர்களும், தற்காலத்திலே தாங்கள் பிறந்த இலக்கினத்தை அறிந்தவர்களாகவே இருக்கிறார்கள். என்ன தெசையில் ஒருவர் பிறந்தாரென்றும், அந்தத் தெசையில் எவ்வளவு இருப்பு இருந்ததென்றும் அறிந்துகொள்வது சொற்ப கஷ்டந்தான்.

முகவுரையில் நீங்கள் கவனித்த மனுஷனுடைய பூரண ஆயுளான நூற்றிருபது வருஷமும் ஒன்பது தெசைகள், அல்லது எண்பத்தொரு புத்திகள் கொண்டன. இந்தக் கணிதம், சந்திரகெதியைப் பொறுத்தது. இயற்கையிலேயே 360 பாகை கொண்ட சந்திரனது சுற்றோட்டம் ஏறக்குறைய இருபத்தேழு நாட்களில் ஏற்படுகின்றது. ஆதலால், ஒரு தினத்திலே 13 பாகை 20 கலை தாண்டப்பெறுகின்றது. இதை நம்மவர்கள் நக்ஷத்திரமென்று சொல்லுகிறார்கள். ஆரம்பத்திலிருந்து 13 பாகை 20 கலை செல்லும் தூரம் அச்சுவினி நக்ஷத்திரமாகும். அப்பால் 26 பாகை 40 கலை செல்லும் வரை பரணி நக்ஷத்திரமாகும். இவ்வகையே ரேவதி அந்தமாக 27 நக்ஷத்திரங்களுண்டு. முகவுரையிலே ஒன்பது தெசைகளைப்

பற்றிக் கூறினோம். ஆதலால் மும்மூன்று நக்ஷத்திரத்திற்கு ஒரே தெசை ஏற்படுமென யாரும் மதித்துக்கொள்ளலாம். ஒரு நக்ஷத்திரமும், அதற்குப் பத்தாவது நக்ஷத்திரமும், பத்தொன்பதாவது நக்ஷத்திரமும் ஒரே தெசாதிபனைப் பொறுத்ததாகும். அவ்வகையே அச்சுவினி, மகம், மூலம் ஆகிய நக்ஷத்திரங்களிற் பிறந்த குழந்தை கேதுதெசையோடு பிறக்கின்றது. கேதுதெசை ஏழு வருஷம் கொண்டதென்று முகவுரையில் சொன்னோம். இந்தத் தெசையில் சென்றதும் இருப்பும் நக்ஷத்திரத்தில் சென்ற நின்ற நாழிகைகளுக்கு ஏற்ப ஏற்படுவன. அனேகர் ஜோஸ்யத்தில் பிரவேசிக்குமுன் ஜாதகம் எழுதும் முறையையும், பஞ்சாங்க கணித முறையையும், கிரகஸ்புடகணிதங்களையும் பூரணமாகக் கற்றுவிடவேண்டுமென்று நினைக்கிறார்கள். இது தவறு. சுத்தமாகக் கணிதத்தையும் பலாபலன்களையும் கற்றுச் சாதனைசெய்ய ஒருவன் ஆயுள் போதாது. மேலைத்தேச ஆங்கில வைத்தியர் மருந்தைக் குறித்துக் கொடுப்பதே தவிர மருந்து செய்வதில் தம் காலத்தைக் கழிப்பதில்லை. அதுபோலக் கிரக பலாபலன் சொல்லும் அபூர்வமான வித்தையைச் சாதனைசெய்ய விரும்புபவர் நுட்பமாகக் கணிக்கப்பட்ட பஞ்சாங்கங்களும், அதிநுட்பமான ஜன்மபத்திரிகைகளும் இலகுவில் கிடைக்கக்கூடிய இக்காலத்தில் எதற்காகக் கணிதாப்பியாசத்திற் காலத்தைக் கழிக்கவேண்டியது?

இவையிருக்க, சேதுவில் இருப்பு ஓர் குழந்தைக்கு ஒரு நாளுக்குக் குறையவும் இருக்கலாம். ஆறு வருஷம் பதினொரு மாதம் இருபத்தொன்பது நாளாகவும் இருக்கலாம். அல்லது இவற்றிற்கிடையிலுள்ள எப்பிரமாணமுள்ள காலமாகவும் இருக்கலாம். முதல் தெசையின் இருப்பு கண்டுகொள்ளப்பட்டால், அடுத்த தெசைகளைக் கிரமமாகக் காண்பது கஷ்டமல்ல.

இப்போது நாம் கேதுதெசையோடுதான் இந்நூலை ஆரம்பிக்கிறோம். இந்தக் கேதுதெசையிலே ஓர் குழந்தை கெட்ட காந்தியை வீசுகின்றது. அடிக்கடி நோய்வாய்ப்படுவது, பெற்றோர்களுக்கு மனத்தளர்வைக் கொடுப்பது, ஆராய்வில்லாமல் கொடுக்கல்வாங்கல் செய்து பொருள் முடைப்படும் பலனைக் கொடுப்பது, கவலையீனம், அக்கறையின்மை ஆகிய இவற்றையும் ஏற்படுத்தும். இக் குழந்தைகளுக்கு இரத்த அசுத்தமும் சொறிசிரங்குகளும் உண்டாகும். இவ்வகைத் தளர்வுற்றும் குழந்தை சுறுசுறுப்பும் விவேகமும் பொருந்தியதாகும். என் அபிப்பிராயத்தைக் கூறுகில், கேதுதெசையில் பிள்ளைகள் பிறந்து கஷ்டமனுபவித்துத் தீர்த்துவிடுதல் நல்லதென நினைக்கிறேன். எவ்வகைப்பட்ட கிரகத்தின் கொடுமையும், கேது கெட்டதாயின் இதற்கு நிகராகாது. அம்மைகுத்துவது, ஊசிபோடுவதுபோல் முன் கஷ்டமடைந்தால் பின்பு கருவிகள் நோயை எதிர்க்குமல்லவா? ஓர் குழந்தையின் பலன், பதினாறுவயதாகித் தன் சுய நலங்களில் தான் ரமிக்கும் வரை பெற்றோர்கள், பராமரிப்போர், சகவாசி



கள் ஆகிய இவர்களுக்கே. இக் கிரகபலன் பதினாறு வயதின்மேல் சம்பவித்தால் பொதுவாக ஓட்ட ஆட்டம் குதிப்புகளையும், கலகக்குணத்தையும், மார்க்கப்பற்றில்லாத குடும்பத்திலாயின் அதிக பயபக்தியையும் அதனால் தொழிலுக்கு இடையூற்றையும், சற்குடும்பத்திலானால் நிரீச்சுரவாதத்தையும், புத்திக்குறைவு, அமிதபோசனபானாதிகளால் ஏற்படும் அஜீரணம், கெட்டசகவாசம், பொருள்முடை, தகுதியற்ற ஸ்திரீகளைத் தெரிந்துகொள்ளுதல் ஆகிய இப் பலன்களையும் கொடுக்கும். விசித்திர வித்தையாளர், பாதிரிமார், இராஜ்யதந்திரிகள், ஜனசாரத் தலைவர்கள் ஆகிய இவர்கள் இந்தக் கிரகத்தின் கெட்ட பலனால் அதிகம் பீடிக்கப்படுவதில்லை. இவர்கள் பொதுவாகக் கஷ்டத்திலும் தன்னொறுப்பிலும் மகிழ்பவர்கள். எப்படியாயினும், இந்தக் கிரகத்தினுடைய பலன் ஒரு ஸ்திரீக்காயினும் ஒரு புருஷனுக்காயினும் யதார்த்த சுகஅனுபவத்துக்குரியதல்ல. அபகீர்த்தி, வெகுஜன வெறுப்பு, மாறான விளக்கம், கீர்த்திக்குப் பங்கம் ஆகிய இவை ஒரே தொடர்பான அனுபவமாகும். பின்சீவியத்தில் மாத்திரம் பூர்வீக மாதிரியாக ஜீவனஞ்செய்து ஒதுங்கிக்கொள்பவனுக்கு மாத்திரம் இது உவந்ததாகும். சமாதானமாகச் சீவியத்தைக் கழிக்கவேண்டுமென்றால் ஒருவன் முன்அணியில் நிற்காது பின்வாங்கிக்கொள்வது நல்லதென்று நான் என் நண்பர்களுக்கு வற்புறுத்துவதுண்டு. மகர கன்னி லக்கினங்களிற் பிறந்தோர் மாத்திரம் இத் தெசையைப்பற்றி நடுங்கவேண்டியதில்லை. அவர்கள் மாத்திரம் இராஜதயவுபெறுதல், பலவகையான விதமாகக் கௌரவம்பெறுதல், காத்திராத லாபமடைதல், யாரும் தட்டிப்பேசாத உயர்நிலையடைதல் ஆகிய இப் பலன்கள் பெறுவர். கிரகபலன்களும் வயது, காலம், வகுப்பு, பாலாரைப் பொறுத்தது. காலங்கள், முகாமை, இராஜ்யதந்திரநிலை, கௌரவம் இவற்றிற்குரியவையானால் ஓர் வாலிபனின் கல்விக்கு இடையூறானவையாம். ஒரு வாலிபனுக்கு வரின் ஜனவசியத்தையும் அனுகூலத்தையும் கொடுக்கும் காலம், ஓர் வதுவுக்கு உண்டாயின், அவள் வருங்காலம் முழுவதையும் நாசஞ் செய்யவும் கூடும்.

கேதுவில் சுயபுத்தி நான்கு மாதம் இருபத்தேழு நாட்கள் கொண்டது. சிறுகுழந்தைகளுக்கு வரில் அவர்கள் தேகசுகத்தை மிகவும் கவனமாகப் பார்க்கவேண்டியது. அரசாட்சி உத்தியோகஸ்தராயின், நீண்ட ஓய்வு எடுத்துக்கொள்வது நல்லது. கூட்டங்கள் சங்கங்களிலிருந்து விலத்திக்கொள்வதும் நல்லது. இளைப்பாறுபவன்போல் இருத்தலும் நல்லது. நம்பிக்கை விசுவாசம் உள்ளவர்களை நான் ஸ்தலயாத்திரை செய்பச் சொல்வதும் உண்டு.

அடுத்த புத்தி சுக்கிரனுடையது. இது ஒரு வருஷம் இரண்டு மாதம் வரை உள்ளது. மகரகன்னியிற் பிறந்தவர்களுக்கும் கும்பலக்கினத்திற் பிறந்த அனேகருக்கும் இது ஓர் பிரதானமான காலம். பூமி, வீடுவாயில், தளபாடவிருத்தி, சூதுபோன்ற லாபம், பிரயாசையில்லாத வரவு, குதிரைப்

பந்தயம் போன்ற லாபம் ஆகிய இவற்றால் பலனடைவதும் உண்டு. தனு, மீன லக்கினங்களிற் பிறந்தவர்களுக்கு இது பல கஷ்ட நஷ்டங்களைச் செய்யும். மற்ற இலக்கினங்களிற் பிறந்தவர்கள் நற்காலம் எப்போது வரும் என்று காத்திருந்து காலங்கழிக்க வேண்டியதுதான். கஷ்டகாலத்தை வெல்லக்கூடிய அற்புத மனோதத்துவமுள்ளவர்களும் மஹான்களும் இருக்கின்றார்கள் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால், அநேகர் அவ்விதப் பேறு மிக அரிதென்கிறார்கள். அனுகூலம் அடைந்தாலும் அடையாவிட்டாலும், காலபலனை வெல்வதற்கு முயற்சிப்பது சிரேஷ்டமென நான் அபிப்பிராயப்படுகிறேன்.

மூன்றாவது புத்தி சூரியனுடையது. இதன் பிரமாணம் நான்கு மாதம் ஆறு நாட்கள். இந்தச் சூரியன் தெசாதிபனுக்குப் பகைவன். ஆதலால், இக்காலத்தில் ஒருவன் சீவியமானது எண்ணெயில்லாத இயந்திரக் கருவிகள், அல்லது உருள்மாத்திரையில்லாக் கோசுகள் போல நடக்கும் எனலாம். தெசாநாதனும் புத்திநாதனும் தம்தம்மில் எவ்வளவு மேம்பாடு அடைந்திருந்தாலும், ஒருவரில் ஒருவர் அந்தர்க்கதராகும்போது சுபபலனைக் கொடுப்பதில்லை. இக்காலங்களில் சாந்தி சமாதானங்கள் கிடைக்கா. இக்காலங்களில் போசனபானாதிகளைச் சுருக்கி நடக்கவேண்டுமென்று நான் பலரையும் கட்டுப்பாடு பண்ணுவதுண்டு. சந்திரபுத்தி எழு மாதம் உடையது. மீனவிருச்சிக லக்கினங்களிற் பிறந்தோர்களுக்கு மற்றவர்களுக்கு உண்டாகும் விசேஷ கஷ்டங்கள் உண்டாவதில்லை.

ஐந்தாவது புத்தி செவ்வாய்க்குரியது. இதன் காலம் நான்கு மாதம் இருபத்தேழு நாள். கடக சிங்க லக்கினங்களிற் பிறந்தோருக்கல்லாது மற்றையோருக்கு இக்காலம் தீங்கை விளைப்பதே. தொற்றுநோய், மருந்துக்கு இடங்கொடுக்காத ரோகங்கள், மூளைக்கலக்கம், அச்சம், தடைதாமதங்கள், கீர்த்திகுறைந்த பெண்களால் தொல்லை, சத்துருக்கள், வாக்குவாதம், வியாச்சியம் முதலியனவும் உண்டாகலாம். சத்துருக்களோடு சகவாசஞ் செய்வது நல்லதல்ல. அரசாட்சி உத்தியோகஸ்தர்களும், தொழிலாளர்களும் ஆபீஸிலிருந்து விலகியிருக்கவேண்டிய காலம். இக்காலத்தில் புதிய ஆரம்பங்கள் செய்யக்கூடாது.

இதற்கடுத்த இராகுபுத்தி ஒரு வருஷம் பதினெட்டு நாள் உள்ளது. இக்காலம் நமக்கு நன்மை பயப்பதாயின், இளைப்பாறுதல், எட்டாங்கட்டளை, சத்துருவை அடக்கும் முறைகள், இளைப்பாறும் நோக்கமாக உபகாரச் சம்பளத்திற்கு ஒழுங்குசெய்தல், கடன்தீர்த்தல் ஆகிய இவற்றிற்கு உகந்த காலம். இக்காலம் வீட்டுச் சுகத்திற்கு உரியதல்ல. வனசஞ்சாரம், வேட்டையாடுதல் முதலியன தவிர்க்கப்படவேண்டும்.



இந்தக் கேதுதெசையில் எழாவது புத்தி குருவுக்குரியது. பதினொரு மாதமும் ஆறு நாட்களும் கொண்டது. இக்காலத்தில் குடும்பத்திலுள்ள குழந்தைகளுக்குச் சுகக்குறைவு, தலைமைவாய்ந்த பிள்ளைகளாயின் துக்கம், கிலேசம், தடுமாற்றம், தேகசுகக்குறைவு உண்டாகிறது. குருவுக்கு, சனி சம்பந்த நோக்குகள் இல்லாவிடில் கடக, சிங்க, மேட விருச்சிக லக்கினங்களில் பிறந்தோர்க்குச் சிறு லாபங்கள், நாற்காற் சீவலாபம், வாகனசுபம், தருமச்செய்கை, புதுச்சினேகம், சத்துருஜயம் ஆகிய இப்பலன்களுண்டாம். மிதுனகன்னி தனுமீனத்திற் பிறந்தோர்க்கு இக்காலம் நன்மைக்குரியதல்ல.

இதற்கடுத்தது சனிபுத்தி. ஒரு வருஷம் ஒரு மாதம் ஒன்பது நாட்கள் கொண்டது. இடபதுலாலக்கினங்களிற் பிறந்தோர்களுக்கு இக்காலத்தில் விசேஷ பலன்களுண்டு. கும்பலக்கினத்திற் பிறந்தோர்க்குத்தான் இது எல்லாவகையாலும் தீமையானது.

தெசையெல்லாம் கெட்டதாயிருந்தாலும் அந்தியத்திலுள்ள புத்திகள் நல்லனவாயின் முற்பாகத்து நடந்த கெட்ட பலன்களையும் கெடுத்து நல்வழிக்குத் திருப்பிவிடக் கூடுமாதலின், ஒரு ஜாதகனுக்குத் தெசையின் அந்தியபாகம் மிகப் பிரதானமானதென்பது என் நீண்ட அனுபவத்திற் கண்ட உண்மை. ஆதலால், புதன்புத்தி கேதுதெசையில் ஆறேகால் வருஷம் கழித்த ஒருவனுக்கு மிகவும் பிரதானமானது. இது பதினொரு மாதம் இருபத்தேழு நாட்கள் கொண்டது. கடன்தீர்த்தல், நெடுநாள் பட்ட கஷ்டங்களிலிருந்து விலகிக்கொள்ளுதல், நெடுநாட் காத்திருந்தவை பெறுதல் இவை இக்காலத்தில் பெறக்கூடியன. ஏதாவது நீசபங்கங்கள் பெற்றிருந்தால் அல்லாமல் இந்தப் புதன் மேடவிருச்சிகத்திற் பிறந்தோருக்கு நன்மையையே செய்யாது. கெட்ட கிரகம் கெட்டுவிட்டால் இராஜயோகம் உண்டாகுமென்று தெரிந்தோர் சொல்வதுண்டு. புதன் இலக்கினத்திற்கு மூன்று, ஆறு, எட்டு, பன்னிரண்டில் இருந்தால், அல்லது நீசவீடான மீனத்தில் இருந்தால் கெட்டவீட்டுக்கதிபதியாயிருந்தாலும் இப் பிரமாணப்படி நன்மை செய்ய இடமுண்டு. தனுலக்கினத்திற் பிறந்தோனுகி ரவிபுதயோகமுண்டாகி சிங்க கன்னி லக்கினங்களில் இருந்தாரேல் விசேஷ யோகமுண்டாம்.

1918-ம் ஆண்டிற்குச் சமீபத்தில் லோகமான்யதில்கர் இலங்கைக்கு வந்தபோது பிரபையான போட்பலகைகள் செக்கடித்தெருவில் சோதிடர்களுடையனவாக இருக்கக் கண்டு அதிசயித்தார். இதைப்பற்றிய அபிப்பிராயத்தை நமக்குப் பொதுவான ஒரு நண்பருக்கு அவர் சொல்லியிருக்கவேண்டும். இதுகாரணமாக அந்த மஹானிடத்திற்கு நான் அறிமுகஞ் செய்துவைக்கப்பெற்றேன். அவர் கடகலக்கினத்தில் பிறந்தவர். மீனத்தில் சந்திரனிருக்கப் பெற்றவர். பம்பாயில் பெயர்பெற்ற ஜோஸ்யராயிருந்த ஜீவன்ராவ் என்பவர் அவரது ஜோஸ்யராயிருந்தார். திலக

ருக்கு இவர் அனேக வருங்காலபலன்களைத் தவறாது எற்கனவே சொல்லியிருக்கிறார். இவரே முதல்முறை எற்பட்ட ஜெயில் வாசத்தைத் திலகருக்கு எச்சரித்தவர். திலகரோடு நான் சம்பாஷித்த காலத்து அவருக்கு முன்னோர்களிடத்திலிருந்து கர்ணபரம்பரையாகக் கிடைத்த அனேக ஜோஸ்ய அனுபவங்களைக் குறித்துப் பேசினார். அவருக்கு மந்திரிபோன்ற நண்பர் கபர்த்தே என்பவரும் சமீபத்திருந்தார். அக்காலத்து திலகர் இங்கிலாந்துக்குப் போகும் உத்தரவு தடுக்கப்பட்டிருந்தது. கேதுவும் குருவும் சம்பந்தப்பட்டால் அந்த ஸ்தானத்துக்கும், ஆதிபத்தியத்துக்கும் பங்கம் நேரிடும் என்பதையும், குருகேதுக்கள் அந்தர்க்கதமானால் அக்காலங்களில் விசேஷ கஷ்டமேற்படக் கூடுமென்றும் தனக்கு முதல் இராஜதண்டனை எற்பட்டது அவ்வகைப்பட்ட ஓர் காலத்தென்றும் கூறினார். மறுபடியும் அருகிலிருந்தவரைச் சுட்டி, நாலில் குருவிருக்கும் நண்பருக்கு இங்கிலாந்திலிருந்து அழைப்பு எற்பட்டதென்றும், தனக்கு நாலாமிடத்தில் பாபசம்பந்தத்தால், தன் நன்னோக்கங்களும் அரசாட்சியாரால் மாறாக மதிக்கப்படுகின்றனவென்றும் சொன்னார்.

ஒருவருக்குக் கேதுதெசை நடக்கும்போது சுயபுத்தி இருளடைந்ததாகவே இருக்கும். கேதுவுக்குமுன் எற்படும் புதன்தெசை சனிபுத்தியோடு முடிவதால், கேது ஆரம்பித்தவுடன் அவர்களுக்கு ஒற்றுமையில்லாத தன்மையினால் சுயதெசை சுயபுத்தி சகிக்கொணாக் கஷ்டத்தைக் கொடுக்கும். கேதுவும் நாலில் இருந்தால் நடுவயது, பின்வயது உடையவனாயின் உத்தியோகத்தில் இருந்து இளைப்பாறிவிடுவது நல்லது. அரசாட்சி உத்தியோகஸ்தர்களாயின் மிகவும் எச்சரிப்பாக இருக்க வேண்டியது. நாலில் இராகு கேது உள்ள பெண்கள் எழாதிபதி, ஒன்பதாதிபதிகள் பலமேறாவிடில் தலைவர்களுக்கு இராஜவிரோதம் தண்டனைகளைக் கொடுக்கிறார்கள். பாபக்கிரகங்களோடு சுபக்கிரகங்கள் சேர்தல் எப்போதும் பாபக்கிரகங்களின் தீமையைச் சாந்தப்படுத்துவனவல்ல. அனேகமாக விசேஷ தொல்லைகளை எற்படுத்துவனவே.

நோய்களைப்பற்றிக் கூறுகில்: ஒவ்வொரு கிரகத்திற்கும் அதற்கேற்பட்ட நோயுண்டு. ஒரு தெசை ஒரு நோயைக் கொடுத்திருந்தால் அந்தத் தெசைஅந்தம் நோய்நீக்கத்துக்குரிய சிகிச்சை செய்ய உகந்ததாகும். புதன் சுவாசத் தொல்லைகளைக் கொடுத்திருந்தால், அத்தெசை நீங்கி, கேதுதெசை ஆரம்பிக்கும்போது ஈழைநோயும் நீங்கி, மூலரோகம் அனேகருக்கு ஆரம்பிக்கின்றது. பதறுதல், நரம்புத்தளர்வு, படபடப்புள்ள அனேக ஸ்திரீகள், ஆனந்தவாய்வு உள்ளவர்கள் தெசாந்தத்தில் சிகிச்சைபெற்றுச் சுகமடைந்திருக்கிறார்கள். பணமுடை, தேகத்தளர்வு, மனக்குழப்பம், தேசத்தோடு கலகம் இயற்கையிலேயே ஜாதகத்தில்



காட்டப்பட்டிருந்தால் விலகிக்கொள்வது கஷ்டம். மாறிக்கொண்டு வரும் கிரகசஞ்சாரம் அல்லது தெசாபுத்தியால் எற்பட்டால் காலம் மாறமாற நீங்கிவிடக்கூடும்.

இந்நூல் கேதுதெசையோடு ஆரம்பிக்கப்பட்டது. இதன் பலன்கள் தடுமாற்றத்தைக் கொடுக்கக்கூடியன. இராகுதெசையின் பதினெட்டு வருஷங்களும் மிகவும் வேகமானவை. கேதுவுக்கடுக்க இருபது வருஷமுள்ள சுக்கிரதெசை நடப்பதால் இராகுவை இப்போது கூற முடியாது.

இந்தச் சுக்கிரன் பொதுவாகச் சுகபோசனம், சௌகர்யமான வாழ்வு, சிறந்த ஸ்திரீபுருஷர்களுடைய சகவாசம், சகல இந்திரியங்களுக்கும் எராளமான போகமேற்படல், ஆடம்பரமான ஜீவியம், சினேகவாஞ்சை ஆகிய இவற்றைக் கொடுக்கும். தீய சுக்கிரனுக்கு உட்படும்போது மேற்கூறிய பலன்கள் நடக்காவென நாம் கருதவில்லை. நல்ல சுக்கிரனைப் பெற்றவன் அனுபவங்களை இச்சிக்கும்போது அனுபவத்துக்கு வழிவகைகளும் எற்படுகின்றன. அவன் பின்பு துக்கப்படுவதுமில்லை. கெட்ட சுக்கிரனுக்கு உட்பட்டால் இச்சைகளைப் பூர்த்திபண்ணத் தாகங்கொண்டு, அதனாலும் கஷ்டமடைந்து, பின்பும் மட்டில்லாப் போக்கியத்தால் கடன், நோய் முதலியவற்றால் வருந்துகிறான். இத்துடன் நாம் கேதுவை நிறுத்திச் சுக்கிரனிற் பிரவேசிப்போம். அச்சுவினி, மகம், மூலத்திற் பிறந்தோர்க்குக் கேதுதெசை முதலாவதாக எற்படுவதுபோல பரணி, பூரம், பூராடத்திற் பிறந்தவர்களுக்கு சுக்கிரதெசை முதலாவதாக எற்படும். மற்றையோர்களுக்குக் கேதுதெசைக்கடுக்க நடந்து கழியும்.

---

### பரணி, பூரம், பூராடம்.

### சுக்கிரமகாதெசை வரு 20.

| புத்தி | வருஷம் | மாதம் | நாள் | மொத்தம் வருஷம் | மொத்தம் மாதம் | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|
| சுக்கிரன் | 3 | 4 | 0 | ... | ... | ... |
| சூரியன் | 1 | 0 | 0 | 4 | 4 | 0 |
| சந்திரன் | 1 | 8 | 0 | 6 | 0 | 0 |
| செவ்வாய் | 1 | 2 | 0 | 7 | 2 | 0 |
| ராகு | 3 | 0 | 0 | 10 | 2 | 0 |
| வியாழன் | 2 | 8 | 0 | 12 | 10 | 0 |
| சனி | 3 | 2 | 0 | 16 | 0 | 0 |
| புதன் | 2 | 10 | 0 | 18 | 10 | 0 |
| கேது | 1 | 2 | 0 | 20 | 0 | 0 |

## சுக்கிரமகாதெசை பலன்.

ஒரு ஜாதகன் நூற்றிருபது வருஷங்களுக்கு ஜீவனோடிருந்தாலன்றி எல்லாத் தெசைகளையும் பூராவாக அனுபவிக்கமாட்டான். ஆதலால், அற்பாயுள் உள்ளவர்கள் பலருக்கு இந்தத் தெசை ஜீவியகாலத்தில் ஏற்படாது. சிலர் இதை வாலிபத்தில் கழிக்கலாம். சிலருக்கு நடுவயதிலும், சிலருக்கு அந்தியகாலத்திலும் இத்தெசை நடந்தேறும். சில காலங்களில் நன்றாக ஆலோசித்துப் பார்க்கும்பொழுது, நான் ஜோஸ்யர்களுள்ளே ஓர் அதிர்ஷ்டசாலிதானென எனக்கு யோசனை உண்டாகிறது. பூரணமாகக் கஷ்டகாலம் என்று தெரிந்துகொண்டு ஒருவருக்கு நான் சுபம் சொல்லிவிடுவதுமில்லை; அல்லது கஷ்டத்தை வைத்து அழுத்திக்கொள்வதுமில்லை. உயர்தர சாஸ்திரரீதியாகப் பேசுவதானால் கஷ்டகாலம், நல்ல காலம் என்பன இல்லவேயில்லை. ஒவ்வாதது, உகந்தது என்றே நாம் சொல்லிக்கொள்ளவேண்டும். கிரகசுபத்திற்கு ஒவ்வாத காலம் பிரயாணத்திற்கு உகந்ததாகலாம். சம்பாத்தியத்திற்கு ஒவ்வாத காலம் துறவுக்கு ஏற்றதாகலாம். இவ்விதமே ஒன்றிற்கு வேண்டப்படுவது இன்னொன்றிற்கு விலக்கப்படுவதாகலாம். ஆயினும், மீன தனு இலக்கினங்களிற் பிறந்தவர்கள் சுக்கிரதெசைக்கு உட்பட்டவர்களானால் அவர்கள் ஜாதகங்களோடு நான் காலங்கழிப்பதில்லை. அனேக ஜோஸ்யர் அடுத்த வருஷம் முதல் யோககாலமெனச் சிறுதொகையைக் கையிற் பெற்றுக்கொண்டு உறுதிப்படுத்திவிடுவர். இவ்விதமான அநேக சம்பவங்களை நான் கண்டுவிட்டேன். இருபது வருஷங்களின் முன் இலங்கையின் சிரேஷ்ட பட்டணமான கொழும்பிலே பிறிஸ்ரல் ஹோட்டலில் நான் வசித்தேன். ஐந்தாறு வருஷங்களாக நடப்போடிருந்த ஓர் வர்த்தகர் என்னை வந்து பார்த்தார். அவர் ஜாதகத்தைப் பார்த்துச் சக்கரத்தை அடைத்து, மிகச் சிறந்த தக்ஷிணையைப் பெற்று அவர் பலன்களை விவரித்தேன். அவர் ஓர் கௌரவமான பிரபுவென்றும், அவர் நடப்புள்ள செல்வரென்றும், அவர் சூரியன் யோகம்பெற்றிருக்கிறதென்றும் சொன்னேன். அவருக்குச் சூரியதெசை ஆறு வருஷமும் நடப்பிருந்தது வாஸ்தவந்தான். அவருக்குத் திருப்திபொங்கியதனால் பத்து வருஷ பலனுக்கு முற்பணமும் கொடுத்தார். ஏதோ எனக்கும் அவருக்கும் அப்போது தோதுப்படவில்லை. அவருக்கு அடுத்து வந்த சந்திரதெசை பத்து வருஷமும் தீதாக இருந்தது. அவரோ நாளொருவண்ணமாக ஏறிக்கொண்டு வந்தவராதலின் மேன்மேலும் ஏற்றமடையாது பத்து வருஷ கஷ்டகாலம் வருமென்று நம்பவில்லை. அவர் நான் கொடுத்த ஜாதகத்தை எறிந்துவிட்டார். நேரே ஒரு பிரபல ஜோஸ்யரைத் தேடிச் சென்றார். அப்போது, சுயபுத்தி சொற்பம் கஷ்டந்தான். பத்து மாதம் தொல்லையுண்டு. அதுவும் கோசர சுபம் நன்றாக இருப்பதால் கஷ்டம் கொடுக்காதெனச் சொல்லப்பட்டது. அடுத்த வருஷமும் பலன் திருத்த

பக்.18.வரி 19



மடையவில்லை. இன்னொரு ஜோஸ்யரைச் சந்தித்தார். அவர், சுயபுத்தி கஷ்டந்தான். செவ்வாய் இராகு புத்திகள் வாஸ்தவத்தில் தீயனவே. இன்னும் இருபத்துமூன்று நாட்கள் கழிந்தால் இராஜயோகமும் பெரிய போகமும் இழந்தன பெறுதலும் குருவினில் ஆகமென உரைத்துவிட்டனர். இவைகளும் நடந்தேறவில்லை. மறுபடியும் ஒரு பாரிய ஜோஸ்யரின் வாயில் திறக்கப்பட்டது. அவர், சனிபுத்தி கெட்டதென்றும், அதற்கு முந்திய குருவும் சனிபார்வை பெற்றதால் தீமைசெய்ததென்றும், புதன் வந்தால் விசேஷபலன் உண்டென்றும், கஷ்டகாலம் நீங்கும்பொருட்டு எழுபது ரூபா கொடுத்தால் ஓர் இயந்திரம் கொடுப்பதாகவுஞ் சொன்னார். பதினொரு மாதம் கழிந்தும் யோகம் கிட்டியபாடில்லை. ஜோஸ்யர்கள் ஒவ்வொருவராய்ப் பார்த்து, காது புண்பட்டதே பாக்கி. இதற்கிடையில் எனக்கு ஜோஸ்ய விஷயம் ஒன்றுந் தெரியாதென்று இயன்றவரை என்னைத் தூற்றிவிட்டார். பின்பும் என்னைத் தேடினார். இம்முறை பிரிட்டிஷ் இந்தியா ஹோட்டலில் சந்தித்தோம். அவர் உண்மையெல்லாம் கூறினார். சந்திரதெசையின்பொருட்டு நான் அவருக்குக் கொடுத்த எச்சரிப்புக்காக அவர் எனக்குப் பொழிந்த அவதூறை மன்னிக்கும்படி வேண்டினார். துஷ்டகுமாரனின் பிதாப்போல் அவரை அன்போடு வரவேற்றேன். எனக்குக் கொடுத்த தக்ஷிணை சொற்பந்தான். ஆனாலும் நான் அதிகம் கவனஞ்செலுத்தினேன். அதுவுமன்றி, இவ்வளவிலாவது தப்பித்துக்கொண்டதற்காகச் சந்தோஷங் கொண்டாடினோம். அப்போது அவருக்கு முன் என்னிடம் வரும்போது தெசாநாதனாக இருந்தவன் புத்திநாதனானான். சந்திரதெசையில் சூரியபுத்தி நடந்தது. சூரியனே இவருக்குப் பலத்த கிரகம். இது சத்திரவைத்தியத்திற்கு ஏற்ற காலம்போல் என்றும், தொல்லைகளெல்லாவற்றையும் கழற்றிவிடும்படியும், புதிதாக ஒன்றும் தொடங்கவேண்டாமென்றும் சொன்னேன். அவருக்கு ஒருபோதும் புத்தி கேட்டு நடக்க முடியாது. அவர் தன் கடன்காரர்களுடன் நேர்நேராகப் பேசிக்கொள்ளவில்லை. அவர் புதிய தொழில் தொடங்கினார். தான் மறுபடியும் கிளம்பிவிட்டேனெனக் காட்ட விரும்பினார். சந்திரதெசை அவரது தொழிலை அடியோடு முடித்துவிட்டது. ஓர் கடன்காரன் இவரது தொழிற்சாலையை நடுக்கட்டிவிட்டான். நண்ப! தொழிலுக்கு நெப்போலியனே! அவர் இவற்றில் எடுபடமாட்டாரென்பது எனக்குத் தெரியும். வந்த நஷ்டத்தைச் சரிசெய்துகொள்வார். எவ்வகையும் இப்போது நாம் ஒருவருக்கொருவர் அதிதூரத்து ஆறு, கடல், மலை, வனாந்திரங்களுக்கு அப்பாலிருந்தாலும் அவர் என்னை மறக்கமாட்டார்.

ஒருகாலத்து நான் ஓர் தென்னிந்திய தேவஸ்தலத்தில் சாமான்ய வேஷ்டிஅங்கவஸ்திரத்துடன் இருந்தேன். ஓர் திருநெல்வேலி ஜோஸ்யரும்

ஐந்தாறுபேருக்கு ஜாதகம் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது ஒருவரின் ஜாதகத்தைப் பார்த்து மூன்றுமாசத்துள் அவருக்கு நோய்நீக்கம் கூறினார். ஜாதகிக்கு நோயைக் கொடுத்தது புதன். அதில் எட்டுவருஷம் நீங்கியிருந்தது. இன்னும் ஒன்பதுவருஷம் இருக்கவும், எப்படி நற்பலன் கூறினாரென்று எனக்குப் புரியவில்லை. எல்லோருக்கும் வெளிப்படையான தவறு வரும்வரை நான் பார்த்திருந்தேன். பஞ்சாங்கத்தில் சீக்கிரத்தில் சனிமாற்றம் குறிக்கப்பட்டிருந்தது. அந்த மாற்றத்தால் சனி அஷ்டமத்திற் பெறும் ஒருவருக்கு நற்காலம் சொன்னார். உடனே நான் அவரைப் பிடித்துக்கொண்டேன். பலவகையாக சமாளிப்புச்சாட்டுச் சொல்ல எத்தனித்தார். நமக்குத் தொடர்பான பஞ்சாங்கமும் நாமெழுதிய புஸ்தகங்களும் சமீபத்திருக்க, வாதி யாரென்று அறிந்தவுடன் அவர் மன்னிப்புக்கேட்பதுவே பாக்கியாகவிருந்தது.

அந்த மனுஷன் தரித்திரத்தின்மேல் தரித்திரம் அனுபவித்தவர். பல கஷ்டங்களிலிருந்தும் தப்பிக்கொள்வதற்காகத் திருநெல்வேலியை விட்டு மதுரைவந்து சேர்ந்தவர். இந்தக் கஷ்டகாலத்தில் கிடைக்கக்கூடிய ஜோஸ்யர் எல்லாரிடத்திலும் தன் ஜாதகத்தைக் காட்டியவர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையாகச் சொன்னார்கள். ஒன்றிலும் சாரமில்லையென்று அவருக்குத் தெரிந்தது. யாரும் கேட்கக்கூடிய கேள்விகளையும் அவற்றிற்கு உரைக்கக்கூடிய பதில்களையும் அவதானித்துக்கொண்டார். அவ்வளவு அறிவோடு தான் ஜோஸ்யனெனத் தொழில்நடத்தத் தொடங்கிக்கொண்டார். நல்லகாலம் வருவதற்கு அதிகநாளாகுமென்றால் தன்னை யாரும் கவனிக்கமாட்டார்களென்று நல்லகாலம் சீக்கிரம் வருகிறதெனச் சொல்லிக்கொள்வதே இவர் கொள்கை.

இதைப்பற்றித்தான் சனிமாறுகின்றதே, அது அஷ்டமம் என்றாலும் காரியமில்லை. சீக்கிரத்தில் நல்லதைச் சொல்லிவிடுவோம் என்று சொன்னார். இவர்கள் ஒருபோதும் ஜோஸ்யர்கள் ஆகமாட்டார்கள். கையில் துட்டுக் கிடைத்தால் ஏதாவது சிறுதொழிலில் ஆரம்பித்துவிடுவார்கள். தொழிலில் நஷ்டம் வந்தால் மறுபடியும் ஜோஸ்யம், ஸங்கீதம், மாந்திரீகம், குட்டி வைத்தியங்களில் ஆரம்பித்துவிடுவார்கள். நாமோ இந்தக் காலக்ஞான அபிமானத்தால் விலகமுடியாது நியாயப்பிரமாணங்களுக்கும் சுயமரியாதைக்காரருக்கும் புதுநாசரீகம் உற்றோருக்கும் தப்பித்துக்கொண்டு இதுவே கதியெனக்கைவிடாதுநிற்கிறோம்.

இன்னும், தனுசிலும் மீனத்திலும் பிறந்தோர்கள் சுக்கிரதெசையில் கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் ஆளாகிறார்கள். பூர்வீக ஜோஸ்யர்கள் சுக்கிரன் நற்கிரகத்தோடு சேர்ந்தால் சுபபலனைக் கொடுக்குமென்று சொல்லுகின்றார்கள். தீயோர் சுபருடன் சேர்ந்தால் தமது தீமையைச் சுபருக்களித்து, சுபத்தன்மையைத் தாம் பங்குபற்றி நடத்துவாரென்னும் கொள்கையும் உள்ளதுதான். எவ்வகையும் செயற்கைப்பேற்றில் இயற்கைப்பேறு விசேஷந்தான். தனுசில் பிறந்தோர்க்குச் சுக்கிரன் ஆறுக்கும் பதினொன்றுக்கும் அதிபதியாகிறான். மீனலக்கினத்தில் செனித்தோர்க்குச் சுக்கிரன் மூன்றிற்கும் எட்டிற்கும் அதிபதியாகிறான். உகந்தகாலத்தில் சுக்கிரதெசையைப் பெறும் மகர, கும்ப லக்கினத்தோர்கள் மாந்தலைமுதல் சிங்கப்பூர்வரை ஏராளமாக இருக்கும்போது, நாம் ஏன் தனுமீன சுக்கிரதெசையுடையோரோடு நேரம்போக்க வேண்டியது? மகரகும்பத்தோர்க்கு வரும் சுக்கிரன் கெட்டுத்தான்போனாலும் ஜாதகிக்கு ஓர்தர யோகத்தைக் கொடுக்கப் போதிய பலமுள்ளதே. கேந்திரதிரிகோணாதிபத்திய யோகத்தால் மகரகும்பத்தில் செனித்தோர்க்குச் சுக்கிரனின் யோகம் விசேஷமானாலும் மிதுன கன்னியில் செனித்தோர்க்கும் சுக்கிரபலம் அதிகம் குறைந்ததல்ல.



மேடத்தில் பிறந்தோர்க்கு துவிதீயஸப்தமாதிபத்திய தன்மையால் மாத்திரம் சுக்கிரனைக் கெட்டவனென்று தள்ளிவிடக்கூடாது. இரண்டாம் வீடு கெட்டதென்றும், ஏழாம்வீடு தோஷமுடையதென்றும், ஒரேகிரகம் இரண்டிற்கும் ஏழிற்கும் ஆதிபத்தியம் பெற்றால் தீமைசெய்யமாட்டாதென்றும் பராசரமஹாரிஷி அபிப்பிராயப்படுகின்றார்.

மற்றைய இரண்டு தீயவீடுகளுக்கு அதிபதிகளை நீக்கிவிட்டு, ஒரு தீய வீட்டுக்கும் ஒரு நல்லவீட்டுக்கும் அதிபதியாகவரும் கிரகங்களிலும் பார்க்க, ஒரு கேந்திரத்தையும் ஒரு கோணத்தையும் ஆட்சிசெய்பவர் விசேஷ ராஜ யோகத்தைக் கொடுப்பார்.

கேந்திரங்களாவன: ஒன்று, நாலு, ஏழு, பத்து ஆகிய இவ்வீடுகளே. ஐந்தாம் வீடும், ஒன்பதாம் வீடும் திரிகோணங்களெனப்படுவன. மூன்று, ஆறு, பதினொராம் இடங்கள் குரூரஸ்தானங்களாம். இரண்டாம் வீடும், பன்னிரண்டாம் வீடும் மத்தியஸ்தானங்களாம். இந்த இரண்டு வீட்டிற்கும் அதிபதிகள், வேறு பலமேறிய வீடுகளை ஆட்சிசெய்யும்போது இவ்வீடுகளின் ஆதிபத்தியம் பலன்பெறாது. உதாரணமாக: ஓர் கிரகம் ஒன்பதாம் வீட்டிற்கு அதிபதியானால் அதற்கேற்படும் பன்னிரண்டாதிபத்தியம் மதிப்புப்பெறாது. வித்துவான்கள் பேசும்போது ஒன்பதுபன்னிரண்டுக்கதிபதியெனச் சொல்லாது, ஒன்பதாதிபதியென்றே சொல்லிக்கொள்வர். சூரியனும் சந்திரனும் எட்டாம் வீட்டிற்கு அதிபதிகளானால் தீமைசெய்யமாட்டார்கள். இவர்களுக்கும், லக்கினாதிபத்தியம்பெறும் அட்டமாதிபதிகளுக்கும், அட்டமாதிபத்தியதோஷம் இல்லை.

கேதுமகாதெசை நடக்கும் காலத்திலே ஒருவனுக்குப் பல கஷ்டங்களும் தொல்லைகளும் ஏற்பட்டிருந்தால், சுக்கிரதெசை ஆரம்பித்தவுடனே சுய புத்தியிலேயே அதிகபலன் நடப்பதுண்டு. எப்படியும், சுக்கிரன் கெட்டவனுனல் சுயபுத்தி தீயபலன் கொடுப்பதில்லை. கேதுதெசையில் அதிக சுபப்பலன் நடந்திருந்தால் சுக்கிரதிசை சுயபுத்தி முழுவதும் கழிந்துதான் ஒருவனுக்குப் புதியதெசையில் பிரவேசித்த கலக்கம் நீங்கும். சுபபுத்தி அதிகம் நீண்டதாக இருந்தாலும் விசேஷசுபம் அனுபவிக்கவேண்டின் பொறுத்திருக்கவேண்டியது நியாயந்தான்.

ஒருவன் யோகத்தோடு பிறந்திருந்தால், யோகதிசை வராது தாமதப்பட்டுமிருந்தால், சுக்கிரனும் விசேஷயோக முள்ளவனுனல் ஜோஸ்யர்களால் குறிக்கப்பட்ட சுயபுத்திக்குரிய தடைதாமதமின்றி, ஆரம்பித்தவுடனேயே பலவிசேஷத்தால் யோகஞ்செய்யும். இதுவே பாராசரின் கொள்கையாகும்.

மகாதெசை ஆரம்ப அந்திய காலங்களில் சந்திரலக்கின கோசரபலம் மிக விசேஷமானதால் அதைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். சூரியன் ஒருமாசத்திலும், சந்திரன் இரண்டேகால்நாளிலும், செவ்வாய் ஒன்றரைமாசத்திலும், புதசுக்கிரர் ஒருமாசத்திலும், வியாழன் ஒருவருஷத்திலும், சனி இரண்டரை வருஷத்திலும், இராகுகேதுக்கள் ஒன்றரை வருஷத்திலும் இடம் மாறுகின்றன. பிறந்தபோது சந்திரனிருந்த ராசியை முதலாகவைத்து, கிரகங்கள் அவ்வக்காலத்து நிற்கும் ஸ்தானம்வரை எண்ணிப் பார்க்கும் பலன் கோசரமென்று சொல்லப்படும். ஒருவருக்குத் தெசாபுத்திகளின் பலன் பூரணசுபம் செய்யவேண்டுமானுல், சனிகோசாரம் நன்ருக இருத்தல்வேண்டும். குரு கோசரமும் அவ்வண்ணமே பிரதானமானது. ஓர் தெசாகாலத்து அந்தத் தெசாநாதனின் கோசரமே மிகப் பிரதானமானது.

ஆனுல், சூரியகோசரத்தை நாம் அசட்டைசெய்யக்கூடாது. ஒவ்வொரு யூகியும் வருஷந்தோறும் இரண்டுமுறை தனக்கு ஆபத்து உண்டாகி நீங்கினதென உறுதியாகச் சொல்லக்கூடும். இவை சந்திரலக்கினத்துக்குப் பன்னிரண்டிலிருந்து ஜன்மத்திற் செல்லும்போதும் சூரியன் அட்டமத்திற் செல்லும்போதும் உண்டாகும் மாசங்களே. இந்தக் காலங்கள் சகடயோகத்திற் பிறந்தோர்களுக்கு மிகுந்த தொல்லையைக் கொடுப்பன. ஜனனகாலத்திலே வியாழன்நின்ற இடத்திற்கு ஆறு, எட்டு, பன்னிரண்டில் சந்திரன் நின்ருல் சகடயோகமென்று சொல்லப்படும். இந்த யோகத்தோடு பிறந்திருந்து, அரசாட்சியாரில் அல்லது வேறு அதிகாரிகளில் கட்டுப்படாதிருந்தால் வைத்தியர்கள் இடம்மாற விரும்புகின்ருர்கள். நியாயப்பிரமாணிகள் இருந்த இடத்தை விட்டோடப்பார்க்கிருர்கள். வியாபாரிகள் முதல்முடக்கத்தால் கஷ்டப்படுகிருர்கள். ஆறு, ஏழு மாசம் ஒருவன் நல்லாக இருக்கிருன். அடுத்



தாற்போல் சூரியன் அட்டமத்திற்கு வருகிருன். அதுகழிந்து தலைநிமிர்த்த, சூரியன் ஜன்மத்தைக் கிட்டுகின்ருன். ஆதலால்தான் பெரியோர்கள் அடிக்கடி வீழ்ந்து எழுகிருர்களென்று வதந்தி. ஒருமுறை கஷ்டம்வர பொருள் நஷ்டம், மனத்தளர்வு, முதலியன உண்டாகின்றன. இதிலிருந்து நிதானித்து எழுந்திருக்குமுன் அரைவருஷக் கோளாறு தொடங்குகின்றது. மறுபடியும் ரோகம், சோகம், குடும்பத்தொல்லை, வறுமை உண்டாகின்றன.

இந்தச் சுக்கிரன்தெசை முடியும்போது கேதுபுத்தியில் முடிவதால் அநேகர் கேதுபுத்தி வந்தவுடன் சென்ற பதினெட்டு, பத்தொன்பது வருஷங்களாகப் பாடுபட்டுத் தேடியதெல்லாம் இழந்துவிடுகிருேமே அல்லது இழக்க வருகின்றதே என ஆலோசிக்கின்ருர்கள். அடுத்த சூரியதெசையும் நல்லதாயின், சுக்கிரதெசையந்தம் மனப்பயத்தோடு முடிகிறது. சூரியனும் கெட்டதாயின் கஷ்டமே கஷ்டந்தான்.

ஓர் கலனி ஒன்றில் புகைரதத்தொழிற்பகுதி ஆபீஸில் உத்தியோகஸ்தர் ஒருவர் அமர்ந்திருந்தார். அவர் கும்பலக்கினத்தில் பிறந்தவர். அவருக்குச் சூரியனுங் கெட்டவனல்ல. அவருக்குச் சுக்கிரதெசையில் கேதுபுத்தி நடந்தது. அவரை நான் அமைதியாக நடக்கும்படியும், அவரது மனைவிமக்களைச் சொந்தஊருக்கு அனுப்பும்படியும், அன்புடையோரிலிருந்து பிரிந்திருக்கவேண்டுமென்றும் சொன்னேன். அப்போது அவருக்கிருந்த சந்தர்ப்பங்கள், அவருக்கு நம்பிக்கையிருந்தும் கேட்டபடி நடக்க இடங்கொடுக்கவில்லை. அவருடைய சம்பளம் குறைக்கப்பட்டது. ஆபீஸில் வேலைபார்த்த இடத்திற்கு வேருன ஓர் பிரிவில் சேர நேரிட்டது. ஓர் சிறு அபராதமும் விதிக்கப்பட்டார். அவர்நிலைக்குத் தகுந்த பங்காளர் இல்லாத ஓர் புதுஇடத்திற்கு மாற்றப்பட்டமையால் மனைவிமக்களை, இருந்தஇடத்தில் விட்டுத் தனியே செல்லவேண்டியவரானுர். அவருக்குப் பிரிவு, தானப்பிரஷ்டம், தண்டனை, மனைவிமக்கள் சுபக்குறைவு, பொருள்முடக்கம், இரகசியசத்துரு எல்லாம் இக்காலத்து உண்டாயின. இதுவுமன்றி, அவரோடு சேர்ந்த மற்றைய உத்தியோகஸ்தர்கள் ஒருங்குசேர்ந்து இவர்வீட்டில் திருட்டுச் சொத்தை வைத்துப் பிடிக்கவும்பார்த்தனர். மனைவி சிங்கலக்கினத்திற் பிறந்த சாதுரியக்காரி ஆதலின் திருட்டுச்சொத்தை நெருப்புக்கிரையாக்கித் தப்பித்துக்கொண்டனர். இவ்விதமான கஷ்டங்களெல்லாம் ஆபீஸில் லீவு எடுத்துக்கொள்ளுதலாலும், கூட்டநாட்டங்களைக் குறைத்தலாலும், பிரிந்திருத்தலாலும் ஒதுங்கிக்கொள்ளுதலாலும் நிவிர்த்திக்கப்படலாம்.

சென்ற பக்கங்களில் மீனம், தனுவில் பிறந்தவர்களுக்குச் சுக்கிரதெசை கெட்டதென்று ஓர்வகையாகக் கூறிவிட்டேன். மகர, கும்பத்தில் பிறந்தவர்களுக்குச் சுக்கிரன் அதிக விசேஷபலன் செய்யும்.

மேட, துலாத்தில் பிறந்தவர்களுக்குக் குற்றமில்லை. மிதுன, கன்னியில் பிறந்தவர்களுக்குக் குணமான பலன் உண்டு. சிங்கம், விருச்சிகம், கடகத்தில் பிறந்தவர்களுக்கு விசேஷசுபாசுபமில்லாத சமபலனுண்டு. மகரத்தில் பிறந்தவர்கள் செவ்வாய்சுக்கிர சேர்க்கையால் செழிப்பையும் அதிகாரத்தையும் பெறுகிறார்கள். இவர்களுக்குப் புதனும் சுக்கிரனும் சேர்ந்தால் இன்னும் மிக உன்னத ஸ்திதி உண்டாகிறது. இவர்கள் அந்தர்க்கதர் ஆகும்போது மிக விசேஷ பலனுண்டு. கும்பத்தில் பிறந்தவர்களுக்குப் புதசுக்கிரர் சேர்க்கையால் அதிவிசேஷ பலனும் குருசுக்கிர சம்பந்தத்தால் அதி உன்னத நிலையுமுண்டாம். மகரகும்பத்தில் பிறந்தவர்களுக்குச் சுக்கிரன் தானே நற்பலனைச் செய்கிறான். இன்னும் விசேஷசேர்க்கை உண்டானால் சொல்லவே வேண்டியதில்லை. அத்தோடு நல்லதிருஷ்டியும் ஏற்பட்டால் குறிக்கமுடியாத விசேஷபலனுண்டு. மேடத்தில் பிறந்தவர்களுக்குக் குருசுக்கிரயோகம் நன்மை பயப்பது. இடபலக்கினத்தோர்க்குச் சனியின் சேர்க்கையின்றிச் சுக்கிரன் விசேஷநன்மை செய்வதில்லை.

கடகசிங்கத்தில் பிறந்தவர்களுக்குச் செவ்வாயின் சேர்க்கையின்றிச் சுக்கிரன் விசேஷபலன் செய்யாது. இவ்விலக்கினங்களில் பிறந்தவர்களுக்குச் செவ்வாயும் சுக்கிரனும் அந்தர்க்கதர் ஆகும்போது அரசாங்கதெரிவுகளில் அனேகருக்குக் கடும்போட்டியில் வெற்றியுண்டாகிறது. இவ்விதமான ஓர் காலத்தில்தான் சுக்கிரதெசையில் செவ்வாய்புத்தி நடந்தபோது முன்னொரு தெரிவில் தற்போது அரசாங்கசபைத் தலைவராயிருக்கும் சிங்கலக்கினதீரனான ஸேர் வை. துரைசுவாமி அவர்களது நிச்சயமான சித்தியை நான் எற்கனவே சொன்னேன். துலாலக்கினத்தோர்க்கும் சுக்கிரதிசையில் சுபம் அடையவேண்டில் சனியின் சேர்க்கை வேண்டும். எவ்வகையான மாறுதல்கள் அடைந்தாலும் எவ்வகைப் புறநடை ஏற்பட்டாலும் தனுமீனத்தில் பிறந்தவர்களுக்குச் சுக்கிரன் ஒருபோதும் போதிய நன்மையைச் செய்யாது. தனுலக்கினத்திற்குப் புதனும்சூரியனும் சேர்ந்தால் அப்புத்திகள் சுக்கிரதெசையில்தானும் நன்மைசெய்யக்கூடும். மீன விருச்சிகங்களில் பிறந்தவர்களுக்குச் சுக்கிரதெசையில் சந்திரன் வரும்போது சுபபலன் உண்டு. மகரகும்பத்தில் செனித்தவர்கள் புதசுக்கிரயோகம் பெற்றால் அந்தர்க்கதராகும்போது ஜனசமூகமுதன்மை, பொருட்பேறு, மனோசுகம், தேகபுஷ்டி முதலியன விசேஷமாக ஏற்படும். தமிழ்த்தென்னிந்திய ஜோஸ்யர்கள் சுக்கிரதெசையில் சனிபுத்தி ஏற்பட்டால் சுக்கிரனின் பலனைச் சனி கெடுக்குமெனச் சொல்லுகிறார்கள். நமது அபிப்பிராயமோ அப்படியல்ல. நல்லசுக்கிரனை நல்லசனி பிரவேசிக்கும்போது விசேஷநன்மை உண்டாகுமென்றும், கெட்டசனிசுக்கிரர்கள் அந்தர்க்கதராகும்போது அதிகபீடை உண்டாகுமென்றும் நாம் நினைக்கிறோம். இதுவே பராசரரிஷியின் அபிப்பிராயமுமாம். அவர் சனிசுக்கிரர்கள் அந்தர்க்கதராகும்போது விசேஷ நன்மைதீமைகளைச் செய்வார்களென்று கூறுகின்றார். இக்கிரகங்கள் எவ்வளவு நன்மை



யைச் செய்தாலும் இடையில் வயிற்றுநோயைமாத்திரம் கொடுப்பதை நாம் பார்த்திருக்கின்றோம். மீனத்தில் பிறந்தோர்க்கும், கன்னி துலாம் மிதுனத்தில் பிறந்தோர்க்குமன்றி மற்றையோர்க்குச் சூரியபுத்தி நன்மையைக் கொடுக்கும். தனுமேடத்தில் பிறந்தவர்கள் சுக்கிரதெசையில் சூரியபுத்தி வரும்போது விசேஷபலனை அனுபவிக்கிறார்கள்.

சாமான்யமாக யாருக்கும் சுக்கிரதெசையின் முடிவு கெட்டதே. அரசசபையில் மதிக்கப்பெற்ற ஓர் வைத்தியர், ஆரியசாஸ்திர நிபுணரும் பத்திராதிபருமாயுள்ளவர், சுக்கிரதெசை கேதுபுத்தியில் தன் மனைவியையும் தனத்தையும் இழந்தார். ஆனால் உண்மையாக அவருக்குச் சனி, குரு கோசரங்கள் கடூரமாகத்தான் இருந்தன. இப்போது கோசரத்திற் பிரதானமான சிலவற்றைச் சொல்லிவிடுவோம். கோசரஅசுபம் இருந்தால் மனுஷனுக்கு அதிக தீங்குகள் ஏற்படுகின்றன. சிலகாலத்து விசேஷ தெசாபுத்திகள் இருக்கும்போது இந்தச் சந்திரலக்கின கோசாரம் ஏற்றக்குறைவாயிருப்பதால் யாதும் சாரமில்லாதுபோகிறது. ஆயினும், விசேஷகோசரமென்று ஜோஸ்யர்களால் கவனிக்கப்படுகின்ற சிலகாலங்கள் தனித்தனியே மற்றைய கிரகங்களெல்லாம் நல்லதாயிருந்தாலும் அதிகதீங்கைச் செய்வனவே. ஒன்றில் சனி, இரண்டில் கேது, மூன்றில் வியாழன், நாலில் புதன், ஐந்தில் சூரியன், ஆறில் சுக்கிரன், எழில் செவ்வாய், எட்டில் சந்திரன், ஒன்பதில் ராகு வருங்காலம் விசேஷதீங்குண்டாம்.

பாதுகாப்பிற்குக் குரு வேண்டப்படுபவன். சனி கஷ்டம், துக்கம் முதலியவற்றைக் கொடுப்பவன். இவ்விரண்டு கிரகமும் ஒருமித்துக் கேடாயிருந்தால் மிகுந்தகஷ்டம் ஏற்படும். ராகுவும், சனியும், வியாழனும் கன்னியிலிருந்த காலத்து, கும்பராசியில் பிறந்து அட்டமத்து இவற்றைப் பெற்ற எனது நண்பரொருவர் சென்னையில் அவர் நண்பர்களால் ஏற்படுத்தப்பட்ட சூழ்ச்சியில் கைதியாக்கப்பட்டார். அவர் தெசாபுத்திகளும் கேடாகத்தான் இருந்தன.

1926, 1927, 1928 ஆகிய இவ்வாண்டுகளுள் அமைந்த இரண்டரை வருஷகாலத்துச் சனி அட்டமத்திருக்கும்போது ஓர் பெரிய வர்த்தகரும், பிரபுவுமான என் நண்பரொருவருக்கு வியாழதெசையில் கேதுபுத்தியும் நடந்துகொண்டிருந்தது. அக்காலத்து அவர் கௌரவம், மனப்பாக்கியம், செல்வநிலைபேற்றைப்பற்றி நான் மிக ஆலோசித்தேன். அக்காலத்துக் குருவும் பன்னிரண்டு, ஜன்ம ஸ்தானங்களில் அவருக்கு இருந்தது. அவர் மிகவும் சாமர்த்தியகாரர். தனக்கு நடந்த கஷ்டநஷ்டங்களை அவர் வெளிவிடவுமில்லை. இனிமேலும் சொல்லித்திரிபவரல்ல. அப்போது சிறந்த செல்வியான அவர் மனைவிமாத்திரம் தற்கொலை செய்துகொண்டது எனக்குத் தெரியும். இதைத் தெரிந்து அவ்வளவோடுமாத்திரம் அவர் கஷ்டகாலம் கழிந்த

தைக் குறித்து நான் அவரோடு சந்தோஷங்கொண்டாடினேன். அவருக்கும் அவர் நண்பர்களுக்கும் இது ஓர் பாரிய துக்கந்தான். ஆனாலும், தேவஅனுக்கிரகத்தால், நான் காத்திருந்த அவ்வளவுக்கு நடந்தேறிய கஷ்டபலன் குறைவுதான்.

மகாதெசை கெட்டதாயின், புத்தியும் தீதாயின், வியாழன் சனி ராகுக்கள் கோசாரத்துக்குக் கெட்டதாயின், தெசாநாதனுக்கும் புத்திநாதனுக்கும் பகை ஏற்பட்டிருந்தாலும், அல்லது தெசைத்தொடக்கம் தெசாந்தமாகவிருந்தாலும் இரண்டு மெயில்புகைரதம் ஒன்றோடொன்று மோதுவதைத் தடுக்க முடியாது பார்த்திருக்கும் ஸ்டேஷன்தலைவர் உணர்ச்சிபோல் எனக்குமிருப்பதுண்டு. எவ்வளவுபெரிய தீமைகள் நடந்தாலும் அவ்வளவோடு முடிந்துவிட்டதே என்ற திருப்திதான் எனக்கு ஏற்படுகின்றது. கண்டியிலே குவீன்ஸ் ஹோட்டலில் நான் வசிக்கும்போது அடிக்கடி நாம் சந்திக்கும் ஓர் பாரிய நியாயதுரந்தரர் கூறியதாவது: "ஓர் குலஸ்திரீயின் கற்பும், ஓர் யோக்கியனது நிதானமும், ஓர்பண்டிதனின் கீர்த்தியும் எத்தனை சனி ராகுக்கள சேர்ந்தாலும் கெடுக்கமுடியாத பலமுள்ளனவே." இதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் எனக்கு அங்கீகாரமே.

திசைகள் மாறமாற, விருப்பு, நடை, அபிப்பிராயங்களும் மாற்றமடைகின்றன. சூரியதெசையில் தீவிரமாக இருந்த ஒருவன் சந்திரதெசையில் சோம்பல், சாந்தம் பெறுகின்றான். சந்திரதெசையில் பொறுமையாக இருந்த ஒருவன் செவ்வாய்தெசையில் போர்க்கோலம் கொள்ளுகின்றான். செவ்வாய்தெசையில் தீரனாக இருந்த ஒருவன் ராகுதெசையில் பதறுதல் உள்ளவனாகின்றான். ராகுதெசையிலுள்ள தடுமாற்றம் குருவில் சாந்தியடைகிறது. குருவிலேற்படும் தத்துவஞானஉறுதி சனியில் மந்தமாகிறது. இவ்வகையே சனியின் குணங்கள் புதனில் மாறுகின்றன. செவ்வாய்க்கும் ராகுவுக்கும் போல புதனுக்கும் கேதுவுக்கும் யாதும் பேதமில்லை. ஆனால் புதனிலுள்ள அமைதி கேதுவில் ஆறுதலின்மையாக மாறுகின்றது.

சுக்கிரனுக்குச் சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லிவிட்டேனென நினைக்கிறேன். குடுகுடுப்பைஜோஸ்யம் போன்று நன்மைகளை மாத்திரம் தெரிந்துகூறும் கற்றுக்குட்டிகள், சாமான்ய அறியாமையுள்ளவர்கள், ஆகிய இவர்களிலிருந்து வித்தியாசமாக நான் கொள்ளும் அபிப்பிராயங்களை மாத்திரம் இங்கே கூறியுள்ளேன்.

உங்களுள் பதினாயிரம் பேர் ஓர் சீட்டில் பணத்தைப் போடுகின்றீர்கள். அந்தச் சபைக்கு அளிக்கப்படும் அற்பதொகை நீங்கிய மீதத்தை உங்களுள் ஒருவரே பெறுகின்றார். மற்றைய ஒன்பதினாயிரத்துத் தொளாயிரத்துத்தொண்ணூற்றொன்பதுபேரும் முதலை இழக்கிறார்கள். இவ்வகையே தற்காலத்தில் நமக்கு அனுகூலங்கள் ஏற்படுகின்றன. ஓர் உத்தியோகத்திற்கு ஒரு ஆள் தேவையாக இருக்கின்றது.



முந்நூறு பேர் விரும்பிநிற்கிறார்கள். ஒருவருக்கே உத்தியோகம் கிடைக்கிறது. இந்த உலகத்திலே உள்ள துக்க கஷ்டங்களையும் சுகத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். மனப்பாக்கியமற்றவர்கள், வறியவர்களுடைய தொகையைப் பாருங்கள்! ஒரு மனிதன் பூரண சந்தோஷத்தோடிருந்த வருஷம் மாசம் நாட்களைக் கணக்கிட்டுப் பாருங்கள். இந்த உலகத்திலே உள்ள கஷ்டத்திற்குத் தகுந்தபடி கிரகஅசுபங்களும் இருக்கவேண்டுமல்லவா? பராசரமகரிஷி இதை ஏற்கனவே விவரித்திருக்கிறார் அவர் கூறுவதென்னவென்றால், கிரகசார பலன்கள் பின்னலாக இருக்கின்றன. தேவர்களும் நன்மையை மாத்திரம் தெரிந்தெடுக்க முடியாது. ஒரே முறையில் எல்லாக் கிரகங்களும் கேடாக அல்லது நன்மையாக இருக்க முடியாது. ஆதலால் விசேஷதீமையை விலக்கி, சிறுதீமைகளை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஜோதிஷ சாஸ்திரம் நல்லகிரகங்கள் நன்மையாக இருந்தால் நற்பலனைக் கொடுக்கின்றன என்று கூறுகின்றது. ஆதலால், தீமையைச் செய்யவேண்டிய கிரகங்களும் கெட்டுப்போனால் நன்மையைச் செய்கின்றன அல்லவா?

புதன் மேடம் கடகம் சிங்கம் விருச்சிகத்திற்கும், வியாழன் இடபதுலாத்திற்கும், செவ்வாய் மிதுனகன்னிக்கும், சுக்கிரன் தனுமீனத்திற்கும் முன்னே கூறியபடி தாமாக நன்மை செய்வதில்லை. "கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்" என்றபடி கெட்டிருந்தார்களென்றால் ராஜயோகத்தைச் செய்வார்கள். இவர்களும் ராஜயோகாதிபர்களோடு சேர்வார்களானால் அவர்களுடைய யோகத்தைப் பங்குபற்றித் தாமாகக் கொடுப்பார்கள். மிதுனகன்னியிற் பிறந்தோர்களுக்குக் குரு அதிக நன்மை செய்வதில்லை. மகரகும்பங்களுக்குக் குரு சாரமில்லாதவன். தனுமீனத்திற் பிறந்தோர்க்குக் குருவின் தீமை அதிகம் வலுத்ததல்ல.

மகரகும்பங்களுக்குச் சனி விசேஷ நன்மை செய்ததை நான் பார்க்கவில்லை. அடுத்த அத்தியாயத்தில் நாம் சூரியதெசையைப்பற்றி ஆராய்வாம். அது அதிஉத்தம கிரகம். மற்றைய கிரக நக்ஷத்திராதிகளுக்குப் பிதா போன்றது. சராசரப் பொருட்கள் எல்லாவற்றிற்கும் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார கர்த்தா. சூரியன் பெருமையை உணர்ந்துதான் பூர்வீகர்கள் சூரிய உபாசனையை உண்டுபண்ணிவிட்டார்கள். கீழைத்தேசத்தவர்கள் சூரியமண்டலத்தை மத்தியில் தேவனையுடையதாகத் தியானத்திற்கும் உபயோகப்படுத்தினார்கள். சூரியனது ஆதிபத்தியங்களின்றி ஒருவரில் ஒருவர் முதன்மை இருக்காது. சூரியனின்றித் தலைவர்கள் அதிபதிகள் அரசர்களும் இருக்க முடியாது. சுக்கிரனின்றி எப்படிக் கிருகசுபம் அனுபோகங்கள் கிருபை லக்ஷ்மீகரம் வசியம் இல்லாதுபோய்விடுமோ, அப்படியே காந்திகம் அதிகாரம தேஜஸ் புருஷத்துவம் எல்லாம் சூரியன் இல்லாது அற்றுப்போம்.

ஓர் பிரபு ஒருவருக்கு அக்காலத்தில் அவர் சர்வகலாசாலை மாணவனாக இருக்கும்போது, நான் என் தந்தையாரின் மகிமையாலும் பரம்பரைப் பெருமையாலும் தொழில் நடத்திக்கொண்டிருக்கும்போது சொல்லிய ஜோஸ்ய பலனை ஒருபோதும் மறக்க மாட்டேன். அவர் ஏழெட்டு வருஷம் என்னில் முதிர்ந்தவராக இருந்தார். அவர் ஒரு செல்வமுள்ள குடும்பத்தில் பிறந்தவர். சந்திவாய்ந்தவர். நடப்புள்ளவர். தீர்மானபுத்தியும் மனோபலமுமுள்ளவர். இப்போதும் தன் காலத்தில் தலைவனாக விருக்கிறார். அவர் ஜாதகத்தை எனக்குக் காட்டும்போது அது தன்னுடையதென அவர் எனக்குச் சொல்லவில்லை. நாலு கிரகம் நீசம்பெற்ற அவர் ஜாதகத்தில், ஜோஸ்யமாகிய சமுத்திரத்திலே சுழியோடி உண்மையான பலன்களாகிற முத்துக்களை எடுத்து அவருக்குக் கொடுக்கவும் எனது அனுபவம் போதியதாக இருக்கவில்லை. நான், அந்த ஜாதகன் பிடிவாதமுள்ள முரடனென்றும், கல்வியற்றவனென்றும், வறியவனென்றும், தேகசுபமற்றவனென்றும் சொல்லிவிட்டேன். அந்த ஜாதகத்திலுள்ள ஒரு உண்மை என்னவென்றால், நீசமான கிரகங்கள் பங்கம் அடைந்தாலும் அடையாதிருந்தாலும், கெட்டுப்போன கிரகங்களெல்லாம் கெட்டவீடுகளுக் கதிபதிகளே. எற்கனவே நாம் "கெட்டவர் கெட்டிடில் இராஜயோகம் கிட்டும்" என்று சொல்லிவிட்டோம். சீவியம் வறுமையில் ஆரம்பித்தால்தானும் மகத்துவத்தில் எழுப்பிவிடக்கூடியது. இப்போதும் அவர் வாஸ்தவத்தில் தேகசுபம் உள்ளவரோ அல்லது சாதுதானோ என்பதை நான் வாதிக்கவில்லை. ஆனால் செல்வம் தகைமை நடப்பு ஆகிய இவை அவருக்கு இருக்கின்றன. அவர் சாமர்த்தியக்காரன். சக்தி உள்ளவர். கல்கத்தா சர்வகலாசாலையில் பீ. ஏ. பட்டம் பெற்றவர். இலங்கை உயர்தர நியாயஸ்தல நியாயதுரந்தரர்.

ஒருமுறை ஓர் சிரேஷ்ட தபாற்கந்தோர்த் தலைவரின் மனைவி என் கையில் ஓர் சடகலக்கின ஜாதகத்தைக் கொடுத்தார். அது வாஸ்தவத்தில் இப்போது அரசாட்சியாரிடம் நெடுங்காலம் உத்தியோகஞ் செய்து விருதுகளெல்லாம் பெற்று இளைப்பாறியிருக்கும் அவர் நாயகருடைய சிங்களமுறைப்படி எழுதப்பெற்ற ஒரு நீண்ட ஓலைஜாதகம். அந்த அம்மாள் தனக்கு ஜோஸ்யவிஷயம் சொற்பம் தெரிந்தபடியால் தங்களுக்கு ஓய்வான நேரத்தில் சிற்றேவல் கைஉதவிகள் செய்யும் ஓர் தபாற்சேவகன் பரீக்ஷைசெய்யும்படி கொடுத்தானென்றும், நான் அதைச் சுத்தமாகப் பார்த்துச் சொன்னால் எனக்கு ஏராளமான வரும்படி செய்துவைப்பேன் என்றும் சொன்னார். மேற்கூறிய நியாயதுரந்தரரின் ஜாதகம் பார்த்ததோடு எனக்குக் கொஞ்சம் புத்தி பிடிபட்டுவிட்டது. அந்தச் சிங்களநோனா சபைக்கு இராணி போன்றவர். சிங்கள வியாகரணந் தெரிந்தவர். ஜோஸ்ப வைத்திய உணர்வுமுண்டு. ஆயினும் இந்தப் பேச்சிற்கு நான் இலகுவில் ஏமாந்துபோபவனல்ல.



உதயத்தில் செவ்வாய் நீசம். சூரியன் துலாத்து நீசம். சுக்கிரன் கன்னியில் நீசம். மகரராசியில் சந்திரதெசையில் ஜனனம். இந்த ஜாதகத்தைப் பார்த்தவுடன் இது தபாற்சேவகனது என்று நினைத்து, அதிர்ஷ்டம் குறைந்த ஜாதகம் என்று சொல்லிவிடுவேனென அவர்கள் நினைத்தவர்கள்போலும்! எனக்கும் ஒரு யோசனை உண்டாயிற்று.

இவ்விதமான நீசபங்க இராஜயோக சாதகங்கள் தபாற்சேவகர்களுக்கு இருந்தால், அந்த யோகம் அவ்வகைப்பட்ட ஏவலாளர்களைப் பெற்றிருந்த, அப்போது இலங்கைப் போஸ்ற்மாஸ்றர்ஜெனறலாக இருந்த மெஸ் பக்ஸ் அவர்களுக்கே உரியதென்பதே. அந்த அம்மாளின் எஜமானும் அவ்விடத்திருந்தார். நான் என் அபிப்பிராயத்தைக் குறிப்பாகச் சொன்னதன்பேரில் அவர் எழுந்திருந்து அந்த ஜாதகமும் இந்தத் தமாஷாவும் தன்னுடையதே என அங்கீகரித்தார். சந்திரதெசையில் ஒன்பது வருஷம் தான் ஜனனகாலத்தில் இவருக்குப் பாக்கி இருந்தது. செவ்வாய்தெசை முடிந்து, இராகுதெசை இராகுபுத்தி முடியுமுன் மாத்தறை காலிப்பக்கத்திலுள்ள தன் வீட்டைவிட்டுக் கிளம்பித் தொப்பிதோட்டத்திற்கு யாருக்குஞ் சொல்லிக்கொள்ளாது ஓடிப்போய்விட்டார். அங்கே கிரமமான தபாலாபீஸ்கள் இல்லை. அவ்விடத்துள்ள தோட்டத் துரைமார்களுக்குக் கொழும்பு சிரேஷ்ட ஆபீஸ்களிலிருந்து இவ்விஷயமாகக் கடிதப் போக்குவரவு ஏற்பட்டிருந்தது. வேண்டிய தளபாடங்கள் வந்து சேருமுன் துரைமார்கள் இந்த ஓடிப்போன வாலிபனைப் பார்த்து இங்கிலீஷ் தெரியுமோ? என வினவினர். போதிய படிப்பில்லாதிருந்தாலும் வேண்டிய அவ்வளவு இருந்ததைப் பார்த்து, அவரைச் சிறு தபாலாபீஸ் தலைவராக நியமித்தார்கள். தபாற்பெட்டியும் வந்து சேரவில்லை. வருகிற காகிதங்கள் எல்லாவற்றையும் இவர் கைகளே ஏற்றுச் சிலகாலம் கொழும்புக்கு அனுப்பின. காலம் செல்லச்செல்ல அவரும் பெரியவரானார். அந்த ஆபீஸும் பெரிதுபெரிதாயது. அந்த இடத்திலேயே இருந்து அவர் வேலைபார்த்து இளைப்பாறும்போது முதலியார், முகாந்திரம் என்னும் பட்டங்களைப் பெற்றார். அவருடைய சம்சாரம் இப்போது தேகத்தைத் துறந்தனர். அந்தத் தபாலாபீஸ் அந்த டிஸ்திறிக்குக்கு இப்போது சிரேஷ்ட ஆபீசாயது. இராகுதெசையில் இராகுபுத்தி கழிந்த மீதக்காலம் அவருக்குச் செழிப்பைக் கொடுத்தது.

குருதெசையில் மனரம்மியமும் சாந்தியும் செல்வமும் ஏற்பட்டன. அடுத்த சனிதெசையில் கௌரவமும் மேன்மையும் ஏற்பட்டன. கர்க்கடகலக்கினத்திற் பிறந்தவனுக்குப் புதன்தெசை எப்படியாயிற்றோ? அவர் சனிதெசை கழிந்து புதன்தெசை ஆரம்பித்தால் எப்படியாகும்? என்னோடு பேசுங் காலங்களிலெல்லாம் தன் சேர்க்கப்பட்ட கைகளை தொப்பிதோட்டத் தபாற்பெட்டியாக இருந்தது என்று சொல்லிக்

கொள்வதுண்டு. எனெனில், கொழும்பிலிருந்து தளடாடங்கள் வந்து சேரும்வரை கட்டப்படும் காகிதங்கள் எல்லாவற்றையும் தன் கையில் எற்றாலல்லவா?

சூரியதெசைக்கு எற்பட்ட ஆறு வருஷத்தில் ஒருதினமோ அல்லது ஐந்து வருஷம் பதினொரு மாசம் இருபத்தொன்பது நாளோ பாக்கி இருக்கப் பிறந்த குழந்தைகள் பிதாவுக்குப் போகத்தை அல்லது நாசத்தைக் கொடுக்கின்றன. இந்தச் சிசு எற்கனவே தன் தொழிலைக் காட்டத் தொடங்கிவிடுகிறது. பிறக்க ஐந்து மாதத்திற்கு முன்பே யோகாவயோகங்கள் பிதாவுக்கு ஆரம்பித்துவிடுகின்றன. தனுலக்கினத்திற் பிறந்த சூரியதெசைக் குழந்தையின் பிதா ஒதுக்கிலிருந்து சில வேளை மஹாசபைக்கு எறுகிறான். ஒருமட்டாக மேடலக்கினக் குழந்தை எற்றங் கொடுக்கும். ஒன்பதாதிபதியான சூரியனும் பத்தாதிபதியான புதனும் சேர்ந்திருந்தால், அல்லது வீடு மாறியிருந்தால் பலன்கள் மிகச் சிரேஷ்டமாக இருக்கும். இவ்வித யோகத்தால் உயர்ந்த பேறுகள் உண்டாகின்றன. பத்திரிகை ஆபீஸில் ஓர் சிறு குமாஸ்தா பத்திராதிபராகிறான். நியாயவாதி நீதிபதியாகிறார். பங்காளி சொந்தக்காரனாகிறான். எல்லாம் எற்ற முறையில் பலன் கொடுக்கிறது. இந்தச் சூரியதெசையிலே மீனத்திலும் கன்னியிலும் பிறந்தோர்க்குப் பால்ய மத்திய வயோதிக காலத்துட்பட்ட எக்காலத்தாவது யோகம் நடப்பதில்லை.

சூரியனுடைய தொழிலும் சுக்கிரனுடைய தொழிலும் வேறுபட்டனவாதலால், இருபதுவருஷச் சுக்கிரனின் யோகத்தை அனுபவித்துவிட்டு, சூரியன் எவ்வளவு நல்லவனானாலும் ஒருவன் திகைக்கிறான். விசேஷ ராஜயோகம் மாத்திரம் எற்பட்டால் சூரியன் ஆரம்பத்திலேயே தடை தாமதமின்றி யோகத்தைக் கொடுக்கத் தயாராக இருக்கிறான்.

---

### கார்த்திகை, உத்தரம், உத்தராடம்
### சூரியமகாதெசை வருஷம் 6.

| புத்தி | வருஷம் | மாதம் | நாள் | மொத்தம் வருஷம் | மொத்தம் மாதம் | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|
| சூரியன் | 0 | 3 | 18 | ... | ... | ... |
| சந்திரன் | 0 | 6 | 0 | 0 | 9 | 18 |
| செவ்வாய் | 0 | 4 | 6 | 1 | 1 | 24 |
| ராகு | 0 | 10 | 24 | 2 | 0 | 18 |
| வியாழன் | 0 | 9 | 18 | 2 | 10 | 6 |
| சனி | 0 | 11 | 12 | 3 | 9 | 18 |
| புதன் | 0 | 10 | 6 | 4 | 7 | 24 |
| கேது | 0 | 4 | 6 | 5 | 0 | 0 |
| சுக்கிரன் | 1 | 0 | 0 | 6 | 0 | 0 |



## சூரியமகாதேசை பலன்.

சூரியன் ஐந்தில் பத்தில் இருந்தால் பிதாவுக்கு நன்மையே இல்லை. பிதா, புத்திரர் என்ற உரிமையும், ஒருவரால் ஒருவருக்கு உபயோகமும் போதியஅளவு கிடைக்கிறதில்லை. ஒரு பிதா இவ்வகையான ஓர் குழந்தையின் ஜனனத்தால் பலதொல்லைக் காளாகிறான். பொருள் நஷ்டம், உத்தியோகத்தொல்லை, நோய் முதலியன எற்படுகின்றன. இக் குழந்தைக்கு அப்போது சூரியதெசையும் நடந்தால் கஷ்டபலனைச் சொல்ல வேண்டியதில்லை. சுயபுத்தியிலே மற்றைய கிரகங்களின் சுயபுத்தியிலும் வேறுபாடாக ஒன்றும் சொல்ல விருக்கவில்லை. இரண்டாவது புத்தி சந்திரனுடையது.

விருச்சிகலக்கினத்தில் ஒருவன் பிறக்க, ஒன்பதாதிபதி சந்திரனும் பத்தாதிபதி சூரியனும் சேர்ந்திருந்தால் விசேஷ யோகமுண்டு. அவர்கள் அந்தர்க்சதரானால் வேண்டியதெல்லாம் கொடுப்பர். இக்காலத்துக் குடும்பம் உயர்நிலை அடைகிறது. தம்மளவில் எவ்வளவு நல்லவர்களாயிருந்தாலும் சூரியனும் செவ்வாயும் அந்தர்க்கதராகும்போது நற்காலம் என்ற உணர்வே எற்படுகிறதில்லை. இரண்டு உஷ்ணக்கிரகங்கள் தெசாபுத்தி நாதர்களாயின் ஜாதகியின் அவா, மதிதப்பிய நடைதவறுதல்களால் மனாரம்மியம் எற்படுவதில்லை. சூரிய சந்திர ராகு கேதுக்கள் அந்தர்க்கதராகும்போது அவர்கள் ஒருவர்க்கொருவர் உள்ள பகையினால் ஜாதகிக்குக் காலம் சுகமாகக் கழிவதில்லை. கொழுப்பு அல்லது எண்ணெயில்லாது நாட்டு வண்டி யோடுவதுபோல் காகாப்புத்தான் பாக்கி. சூரியதெசையில் குரு புத்தி வரும்போது யாதும் குணம் எற்படுவதில்லை. இடபதுலாத்தில் பிறந்தோருக்குச் சூரியதெசையில் சனிபுத்தி வரும்போது விசேஷபலன் கொடுக்கும். இடபதனுசில் பிறந்தோருக்குச் சூரியனோடு சேர்ந்தாலும் சேராதிருந்தாலும் புதன் விசேஷபலனைக் கொடுப்பதுண்டு.

சுக்கிரபுத்தியோடு சூரியதெசை முடியும். கெட்டவீட்டுக் கதிபதியான சுக்கிரன் வந்து தீமையைச் செய்தால் அப்போதும் ஜனங்கள் சூரியன் கொடுத்ததைச் சூரியன் எடுத்துவிடுகின்றான் என்று சொல்லுவார்கள். எப்படியும் சூரியதெசைமுடிவையும் கவனமாகத்தான் கழிக்கவேண்டும். மறுப்பு, விண்ணப்பம், உத்தியோகமாற்றம் வேண்டல், சம்பளஉயர்வுப் பத்திரம், கடனெடுத்தல் ஆகிய இவற்றிற்காக ஒருமுறை பேனாவைத் தொடுமுன் இருமுறை ஆலோசிக்கவேண்டும். உத்தியோகத்தைத் தொலைத்துவிடுவதே நோக்கமென்றால் எனக்குச் சொல்லுவதற்கு ஒன்றுமில்லை. உத்தியோகத்தில் நெடுநாள் இருக்கவேண்டுமென்ற விருப்பிருந்தால்தான் சாவதானம் வேண்டும். சந்திரனும் கெட்டவனாக விருக்க எண்ணெய்ச்சட்டியில் இருந்து அடுப்புள் குதிப்பதுபோலாயின் எதோ நடக்கிறதைக் காணவேண்

ஸ்ரீ மேஷ்தனுசிக்கு சிரேஷ்டபலன்கள் தவிர்ப்பன.
" கன்னி மீனத்திற்கு யோகம் நடப்பதில்லை.

டியதுதான். சூரியனைப்பற்றி அதிகம் சொல்லவேண்டியிருந்தும் மற்ற அத்தியாயங்களில் இடையிடையே கூறப்பட்டபடியால் இவ்வத்தியாயம் பெருக்கவில்லை. இனி அடுத்த கிரகத்தை ஆராய்வாம். கார்த்திகை, உத்தரம், உத்தராடத்தில் பிறந்தவர்களுக்குத்தான் சூரியதெசை முதல் தெசையாகும்.

ஓர் குழந்தை பிறக்கும்போது ஐந்தில் பத்தில் சூரியனது பலாபலன்களைப்பற்றிச் சொல்லியபடியால் அதை வெளிப்படையாக்குவதற்கு இன்னும் சில கூறவேண்டியிருக்கிறது. ஐந்தாமிடமும் பத்தாமிடமும் அரிஷ்டத்தைக் கொடுக்கும் ஸ்தானங்கள். சூரியன், சந்திரன், செவ்வாய் சனி ஆகிய இவை அரிஷ்டர்த்தைக் கொடுக்தும் கிரகங்கள். சூரியனால் பிதாவுக்கும், சந்திரனால் மாதாவுக்கும், செவ்வாயால் மாதுலருக்கும், சனிபால் இந்த இடங்களில் நிற்கும்போது குழந்தைக்கும் அரிஷ்டமுண்டாகும். ராகுவும் அப்படியே. ஒரு குழந்தையின் அரிஷ்டம் அது ஜனிக்க ஐந்து மாதங்களுக்கு முன்பே ஆரம்பிக்கிறது.

1936-ம் ஆண்டின் முற்பாகத்திலே ஓர் பிரவுக்குச் சில புத்தி சொல்லக்கூடிய தருணம் கிடைத்தது. எனக்குப் பல கௌரவமான குடும்பத்தின் நட்பையும், வியப்பையும், அழியாத தயவையும் அது கிடைக்கச்செய்தது. பேர் ஊர் விபரங்களை நான் கூறுவது சரியல்ல. சிலநாட்களுக்கு முன் பிறந்த ஓர் சிறுகுழந்தையின் பிறந்தநேரத்தோடு ஓர் பிரபு என் சிறு ஆபீசில் வந்துசேர்ந்தார். நான் குறிப்பை எழுதினேன். எனது தொழிலில் போதிய தவறுகள் ஏற்படாத தன்மையினாலும், எனக்கு அப்போது வயசும் குறைவான தன்மையினாலும்அக்குழந்தையின் பிதா கைதியாக இருக்கிறாரென்று நான் லௌகிகத்தையும் மறந்து சொன்னேன். அவருடைய முகக்குறியைப் பார்த்தவளவில் நான் சொல்லியது சரியென்று தோற்றினாலும், குழந்தை தனதென்றுமாத்திரம் சொல்லி நிறுத்திவிட்டார். அதற்கு நான் பதிலாக அவர் எப்படி வெளியே இருக்கக்கூடுமென்று சந்தேகித்ததனால் அதற்குமேல் சொல்ல மறுத்துவிட்டேன். அவர் என்னை விபரமாகச் சொல்லும்படி பரிந்துகேட்டும் நான் உறுதியாக மறுத்துவிட்டேன். அப்போது அவர் உண்மையை எனக்குச் சொல்லவேண்டியவரானார்.

அவர் ஒரு கௌரவமான பிரபு. அரசாட்சியாரது நம்பிக்கைத ஆளானவர். அவர் ஓர் உயர்ந்த உத்தியோகத்தில் இருந்தார். எஜமாட்டி சீக்கிரத்தில் ஓர் குழந்தைக்குத் தாயாகப்போகிறாள் என்று தோற்றியது முதல் பலாபலன்களெல்லாம் மாறிக்கொண்டேவந்தன. குழந்தை விருச்சிக லக்கினத்தில் பிறந்தது. பத்தாம் வீட்டில் சூரியன் இருக்கப்பெற்றது. அவரின் பேரில் யாதொரு குற்றமுமில்லாது அவருடைய உத்தியோகமும் நிறுத்தப்பட்டு, பெரியகோர்ட்டில் குற்றவாளியாகவும் தீர்க்கப்பட்டிருந்தது.



அந்தக் குடும்பமோ பாரியது. மற்றைய எல்லாக் குழந்தைகளுக்கும் யோகம் விசேஷமாக இருந்தது. இப்போது நடந்த பலன்கள் சிறுகுழந்தையின் கிரகதோஷத்தால் ஏற்பட்டதென நான் அறிந்துகொண்டேன். ஆவணிமாசம் பிறந்து, சூரியன் பத்தில் வந்து, இன்னும் மேன்மேலும் தொல்லை ஏறிக்கொண்டேவந்து சடுதியாக விடுதலை ஏற்படவேண்டுமென்றும், அவருக்கு ஓர் பகுதியில் அரசநிலை ஏற்படலாமென்றும் சொன்னேன். அவையெல்லாம் இப்போது நடந்தேறிவிட்டன. அக்காலத்தில் சட்டக்கல்லூரியில் வாசித்துக்கொண்டிருந்த சில மாணவர்கள்தான் அவரை என்னிடம் அனுப்பியிருந்தார்கள். அவர்களெல்லாரும் உயர்ந்த நிலையில் இருக்கின்றார்கள். அவர்கள் அதற்குச் சான்றுகூறுவார்கள்.

ஓர் பெரிய ஆங்கிலேய ஹோட்டலில் மனேஜராக இருந்த ஓர் ஐரோப்பியரின் மனைவி தனது அருமையான குழந்தையின் ஜாதசத்தை 1918-ம் ஆண்டு எனக்குக் காட்டினார். அந்த அதிர்ஷ்டமான குழந்தை பத்தில் செவ்வாயோடு பிறந்தது. பத்தில் செவ்வாய் இல்லாத ஜாதகத்தால் என்ன குணம் என்றல்லவா பராசரர் கூறுகின்றார். அப்படியானாலும், பத்திற் செவ்வாய் மாமனுக்குப் பீடையைக் காட்டியது. இவ்விஷயத்தை நான் அந்த அம்மாளிற்குத் தெரியச் சொல்லியவுடன், இந்தியர்களைப்போல் இவ்விதமான நுட்பமான விஷயங்களில் கவனம் செலுத்தாத ஜாதியார் ஆனாலும் தன் சகோதரன், குழந்தைபிறந்த காலத்துப் பட்டாளத்தைச் சேர்ந்த நியாயஸ்தலத்தில் குற்றஞ்சாட்டப்பட்டு அருமையாகத் தப்பியதை அங்கீகரித்தார். அவ்வருஷத்திலே ஐந்தில் இருந்த சூரியன் பலனால் ஓர் பாரிய உத்தியோகஸ்தர் குழந்தையின் காரணமாக உத்தியோகத்தில் பல தொல்லைகளுக்குள்ளாயினர். இக்குழந்தையின் மாதுலரொருவர் சீர்மையில் உயர்தரக் கல்வி கற்றவர் உபகாரப்பணத்தை இழந்தனர். சகோதரியின் குழந்தைகளின் பலனைக் அநேகர் பிரயாணத்தில் கஷ்டமடைந்தனர். பல கஷ்டநஷ்டங்களும் உண்டாயின. சந்திரனது குற்றம் சிலவேளை தாயின் பிராணனை எடுக்காது, அவளை வருத்துவதற்காகக் குடும்பத்துக்குச் சம்பாதிப்பவனை அலைத்துவிடுகின்றது. "கண்ணில் படுவது புருவத்தோடு" என்றபடி பெரிய தீமை சிறுதீமையாகவாவது தோற்றியேதான் மறைகிறது. எவ்வகையும் சிறிதாகவோ பெரிதாகவோ பலன் நடக்காது போவதில்லை.

இலங்கையிலே ஓர் பாரிய தலைவரின் அழைப்புக்கு இசைந்து நான் வடமத்திய மாகாணத்துக்குச் சென்றிருந்தபோது, ஓர் நொத்தாரிஸ் எனக்குத் தன் ஜாதகத்தைக் காட்டினார். அவர் மீனலக்கினத்தில் பிறந்தவர். அவருக்குச் சூரியதெசை ஆரம்பமாயது. இவரது சூரியன் ஆறாமிடத்திற் கதிபதியென்பதை யாருமறிவர். அவருக்கு இருந்த குழந்தைகளின் ஜாத

கமும் குணமாகக் காணப்படவில்லை. மனைவியின் ஜாதகமும் கஷ்டபலனைக் காட்டியது. அவரது நாலு குழந்தைகளுள் ஒன்றுக்குத்தானும் காலம் குணமாக இருக்கவில்லை. அவர் ஒரு கௌரவமான மனுஷன். நாணயமான ஜீவியமுள்ளவர். கணிதத்தில் சாமர்த்தியமுள்ளவர். அவருக்குப் பூர்வபாஷைகள் தெரியும். ஜோஸ்யமும் தெரியுமென்று சொல்லிக் கொண்டார். நான் அவருக்குச் சொன்ன விஷயங்களெல்லாம் இங்கே கூறவேண்டியது அனுவசியம்.

அவருக்குச் சொல்லிய அநேக பலன்களோடு குடும்பத்தைப் பிரித்து வைக்கும்படியும், சுத்தமான சிறுமைபொருந்திய ஜீவியத்தை நடப்பிக்கும்படியும், கொடுக்கல்வாங்கல்களில் கவனமாக இருக்கும்படியும், உத்தியோகக் கடமைகளைக் கவனமாகப் பார்க்கும்படியும், ஏதோ காலத்தைக் கழித்துக்கொண்டு அமைதியாகச் ஜீவித்துக்கொள்ளும்படியும் நான் சொன்னதாக மாத்திரம் இதை வாசிப்பவர்கள் தெரிந்துகொண்டால் போதியதே.

இந்தக் கிராமத்தில் என்னிடத்தில் ஜோஸ்ய விஷயமாக ஆலோசிப்பவர்கள் பலரிருந்தனர். இவ்விடத்திலுள்ள ஜனங்களுக்கெல்லாம் அவர் தனக்குத் தெரிந்த அளவுதானும் எனக்கு ஜோஸ்யம் தெரியாது என்று சொல்லிவிட்டனர்.

இது நடந்தது 1922-ம் ஆண்டிலே. சூரியதெசை ஆறு வருஷமுள்ளது. 1928-ம் ஆண்டு மறுபடியும் நான் அவரைச் சந்தித்தேன். நான் இவர் சங்கதிகளை விசாரித்துப்பார்த்தேன். நான் ஜாதகம் பார்த்த கொஞ்சக்காலத்திலே அவருடைய முதலாவது குழந்தை நோய்வாய்ப்பட்டு, சிறந்த வைத்தியரின் சிகிச்சையில் சுகமடையாது பரகதியடைந்தது. அவ்விதமே அடுத்த குழந்தைகளும் காலமாயின. தாயும் இன்னொரு குழந்தையைக் கற்பமாகிப் பிரசவித்துவிட்டு உயிர்துறந்தனள். இதை எழுதும்போது மனம் நொந்த பிதாவும் இச் சிறுகுழந்தையும்தான் நொத்தாரிஸ் குடும்பத்தில் பாக்கியாயிருப்பவர்கள்.

பிரயோசனங்களுக்கு விலை குறைந்ததால் ஆதனங்களுக்கு மதிப்பும் குறைந்துபோய்விட்டது. அவர் மனப்பீடையும் அலைச்சலும் அவர் வரும்படியையும் குறைந்தன. அவருக்கு மனக்குழப்பமும் ஏற்பட்டன. உத்தியோகத் தொல்லையும் ஆரம்பித்தது. இப்போது அவர் என் தொழில் சாமர்த்தியங்களில் கௌரவம் வைத்திருக்கின்றார். அவர் மீனலக்கினத்தவர். ஆதலால் அடுத்துவரும் சந்திரதெசை எடுத்ததெல்லாவற்றையும் திரும்பக் கொடுக்கும்.



## ரோகிணி, அத்தம், திருவோணம்.
## சந்திரமகாதெசை வருஷ 10.

| புத்தி | வருஷம் | மாதம் | நாள் | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | வருஷம் | மாதம் | நாள் |
| சந்திரன் | 0 | 10 | 0 | ... | ... | ... |
| செவ்வாய் | 0 | 7 | 0 | 1 | 5 | 0 |
| ராகு | 1 | 6 | 0 | 2 | 11 | 0 |
| வியாழன் | 1 | 4 | 0 | 4 | 3 | 0 |
| சனி | 1 | 7 | 0 | 5 | 10 | 0 |
| புதன் | 1 | 5 | 0 | 7 | 3 | 0 |
| கேது | 0 | 7 | 0 | 7 | 10 | 0 |
| சுக்கிரன் | 1 | 8 | 0 | 9 | 6 | 0 |
| சூரியன் | 0 | 6 | 0 | 10 | 0 | 0 |

## சந்திரமகாதேசை பலன்.

ரோகிணி, ஹஸ்தம், திருவோணம் ஆகிய நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுக்குப் பிறக்கும்போது சந்திரதெசை நடக்கும். மற்றைய அத்தியாயங்களில் சொல்லியபடி இந்தச் சந்திரனுக்கும் நக்ஷத்திரத்தில் சென்ற நின்ற நாழிகைகளுக்கேற்ப வருஷம், மாதம், நாள் ஏற்படலாம்.

சந்திரதெசையில் ஜீவியம் ஆரம்பிப்பது பிரீதியான நடைகளையும், வசீகரமான செய்கைகளையும், குற்றமற்ற அனுபவங்களையும் கொடுக்கும். சந்திரன் பலமேறினால் அவன் ஒரேவீட்டுக்கதிபதியானதால் ஏகாக்கிரமான பலன்களையே கொடுப்பான். அவன் விருச்சிக, மீனத்தோர்க்கு மிகுந்த விசேஷபலனைச் செய்வான். பால்யத்தில் பலன்களெல்லாம் பெற்றோருக்கே. ஓர் சிறுகுழந்தை சந்திரதெசையில் பிறந்திருக்கும் ஓர் குடும்பத்தைக் குறிப்பெடுத்துக்கொள்வதில், அல்லது மதிப்பெடுத்துக்கொள்வதில் எனக்கு ஒருபோதும் கஷ்டம் ஏற்படுவதில்லை. எல்லாம் கிரமமாக நடந்தேறுகின்றன. முதியோர்களுங்கூட மனக்களிப்புடன் வசிக்கிறார்கள்.

இந்தியாவிலுள்ள பிரெஞ்சு ஆளுகைக்கமைந்த தேசங்களில் நான் விஜயம் செய்யும்போது ஓர் பாரிய பிரெஞ்சு வர்த்தகரைப் பார்த்தோம். அவர் விருச்சிகலக்கினத்தில் பிறந்தவர். அவருக்கு வயது இருபத்தொன்பது. அவருடைய சந்திரன் சிங்கத்தில் இருந்தது. பத்தாதிபதியான சூரியன் ஒன்பதாம் இடமான கடகத்தில் இருந்தது. இதனால் தர்மகர்மாதிபத்திய பரிவர்த்தனமேற்பட்டது. அவர் ஒரு வர்த்தகஅரசன்போல் இருந்தார். அவரை நான் சீக்கிரமாக விவாகஞ்செய்துகொள்ளும்படியும், வருங்கால முழுவதிற்கும் சந்திரதெசை முடியுமுன் அஸ்திவாரம் இட்டுக்கொள்ளும்படியும் சொன்னேன். இவருக்கு எப்படி அதிர்ஷ்டம் உண்டாயது என்று நான் உங்களுக்குச் சொல்லவேண்டும். இந்தப் பிரபு எட்டு வருஷத்திற்கு முன்பே சந்திரதெசை ஆரம்பிக்கும்போது சிநேகித வாஞ்சையினால் மாத்திரம் அவரில் மகிழ்ச்சியுற்று அன்புகூர்ந்த ஓர் சிறுமியைச் சந்தித்தனர்.

பக்கம் 18. வரி 19.

இச்சிறுமி இங்கிலாந்திலே பலருமறிந்த ஓர் பிரபுவின் புத்திரி. அவர்
வால்காட் கம்பெனியாரின் அதிகாரிகளில் ஒருவர். அவர் தன் சிநேகி
தனைப் பிதாவுக்கு அறிமுகம் செய்துவைத்தார். அந்தப் பெரியவர் பிரதி
உபகாரங் கருதாது ஓர் நற்சாட்சிப்பத்திரம் கொடுத்து புதுச்சேரிக்கனுப்பி
வைத்தார். சென்ற எட்டு வருடத்தினுள் இந்த உயர்நிலை வந்துவிட்டது.
இவ்விதமான சில யோகங்கள் அதிகபலன் பொருந்தினால் பூர்வகுடும்ப பந்து
த்துவம் எல்லாம் மாற்றமடைகின்றன. ஏதோ ஸ்வீகாரம்போனவன்போல
தன் பந்துக்கள் எல்லாரையும் இழந்துவிடுகின்றான். அல்லது தான்
வேறிடத்தில் பிரகாசிக்கிறான். அநேகருக்கு யோகாரிஷ்டம் என்னும்
குற்ற மேற்படுகிறது. அந்தக் குடும்பத்திற்குத் தோதில்லாத விசேஷ
யோக மேற்படுவதால் இவ்வித பல குறைகள் உண்டாகும். ஆனாலும் அவன்
உயர்நிலையில்தான் இருப்பான். எங்கள் பிதாவின் ஜோஸ்யத் திறமை
யில் அதிக வியப்புள்ள ஓர் குடும்பம் இருந்தது. அந்தக் குடும்பத்தில் முத
லாவது குழந்தையில் அவருக்கும் அதிக அன்புதான்.

இந்தச் சிறுவனும் அயலண்டையில் உள்ளவர்களின் மனதைக்
கவர்ந்து வளர்ந்தான். இவனுக்கு நேரே சிறியவன் பொதுநிறமும்
மெலிந்த தேகமும் உடையவனாதலின் யாரும் கவனிக்கவில்லை. பெரிய
வன் ஆங்கிலக்கலாசாலையிற் கல்விகற்க, தம்பி தமிழ்ப்பாடசாலையில்
படித்துவந்தான். இக்காலத்தில் குடும்பத்துத் தொழில்துறையில் முடக்கம்
ஏற்பட்டது. பிதாவும் மனத்தளர்வடைந்தார். இக்காலத்தில்தான்
பிதா நானும் ஜோஸ்யவிஷயத்தில் ஆராய்வுசெய்வதாக அறிந்தார்.
இது 1904-ம் ஆண்டு நடந்தது. கொழும்பு கௌரவ நயிற்பட்டவர்த்த
னர் ஸேர் பொ.ன். அருணாசலம் அவர்கள் தெளிவாக எழுதியபடி, தன்
தொழிலில் என் தந்தையாரின் முதன்மையை இந்தக் குழந்தைகளின்
தந்தையார் அங்கீகரிப்பவர். அந்தக் கௌரவ நயிற் என் தந்தையார்
இந்தியஜோஸ்யகணிதங்களில் பாண்டித்தியமுடையவரென்றும், தமிழ்
றும், இலங்கையில் பிரபல ஜோஸ்யரென்றும், அவரது பஞ்சாங்கம்
இலங்கையிலும் இந்தியாவிலும் அதிகமாகப் பரவுகிறதென்றும் எற்க
னவே, 1899-ம் ஆண்டு நவெம்பர்மீ 1-ம் தேதி எழுதியிருந்தார். அக்
காலத்து நானும் என் தந்தையாருக்குப் பஞ்சாங்கவிஷயத்திலும் காரி
யாலயவிஷயத்திலும் உதவியாக இருந்தேன். (அக்காலத்து இங்கே
கூறப்பட்ட பஞ்சாங்கம் சிறு வேறுபாடுகளுடன் கூடியிருந்தாலும்
இரகுநாதையர் பஞ்சாங்கக் கொள்கைப்படியே கணிக்கப்பட்டது.)

இந்தப் பிள்ளைகளுடைய பிதாவாகிய அந்தப் பெரியவருக்கு
மிதுனலக்கினத்திற் பிறந்த மூத்தமகனுக்கு, மாரகதோஷமிருப்பதை
யும் அற்பஆயுள் யோகமிருப்பதையும் கூறினதுமன்றி, இரண்டாவது
மகனுக்கு விசேஷ பெருமையையும் கூறினேன்.



வாஸ்தவத்தில் அவர் இப்போது உயர்நிலையில்தான் இருக்கிறார்.
அவர் ஒரு நியாயதுரந்தரர். வித்தியாசம்பந்தமாக மாதுருபூமிக்கு ஏவல்
செய்வதில் தன் ஜீவியத்தைச் சமர்ப்பணஞ் செய்துவிட்டார். அவர்
பிறந்தது மகரலக்கினத்திலே. ஆதலால், பதினேழுவருஷப் புதன்
தெசையும், ஏழுவருஷக் கேதுதெசையும், இருபதுவருஷ சுக்கிரதெசை
யும் ஆகிய 44 வருஷமும் அவருக்கு உயர்வைக் கொடுக்கவேண்டிய
னவே. ஆனால், ஒரு குறை மாத்திரம் உளது. அவருக்குப் பூர்வீகர்க
ளுடைய சாத்வீகஉணர்ச்சி இருதயத்தில் குடிகொண்டுளது. அல்லா
விடில் அவரது தயவு, அறிவு, உணர்ச்சிகளோடு அவர் அரசாங்கசபையிலே
தனது மைத்துனரது ஸ்தானத்தில் வீற்றிருக்கலாம்.

இவர் பெருமையடைய முன்னும், பீ. ஏ. பரீக்ஷையில் சித்திபடைய
முன்னும் தாயை இழந்தனர்; நான் குறிப்பிட்ட சகோதரனையும் இழந்த
னர்; பிதாவையும் சகோதரிகளையும் இழந்துவிட்டனர். அவர்களுக்கெல்
லாம் இவர் யோகத்தைப் பார்த்து ஆனந்தத்தையும் இவரால் சுகத்தை
யும் அடைய அனுபவம் இருந்திருக்கவில்லை. இதுதான் யோகாரிஷ்
டம். அவர் இப்போது சிறந்த வீடுகளும், இயைந்த மனைவியும், உயர்
ந்த யோக்கியதையும், மிகுந்த வருமானமும் உடையவராக இருக்கிறார்.

ஓர் ஜோஸ்யன் ஜாதகியின்மேலிருக்கும் அன்பினால், சார்பினால்,
பெறும் பணத்தினால் விசேஷ நன்மைகளைச் சொல்ல ஏவப்படுகிறான்.
நான் இதுவரை அப்படிச் செய்யவுமில்லை; இனிமேல் என் ஏற்பாடுகளை
மாற்றுவதற்கும் என் வயசுமுதிர்ச்சி இடங்கொடுக்காது. நான் பிறக்கப்
பல வருஷங்களின் முன் உடனே சத்திரவைத்தியம் செய்யவேண்டிய
ஓர் கட்டி என் தந்தையார் சிரத்தில் புறப்பட்டிருந்ததாம். வைத்தியர்
அவரது நண்பராதலின், சாமர்த்தியமிருந்தும் கத்தியை ஆழமாக உப
யோகிக்கத் தைரியம் வரவில்லை. இதனால் பன்மடங்கு கஷ்டத்திற்கு
ஆளானார். கஷ்டங்களைச் சொல்லத் தைரியமில்லாது பிரயோஜனமில்
லாத பலன் சொல்லுபவர் அநேகர். அதிகம் பணம் கொடுத்தால்
இராஜயோகம் சொல்லுபவர் பலர். பணத்தைக் குறைத்துவிட்டால்
குறைந்த பணத்தை வேறுவகையாகப் பெற உத்தேசித்து, மந்திர தந்
திர யந்திரங்களைக் குறிப்பர் பலர். சென்றவாரத்துச் சிறந்த தொகை
யைப் பற்றிக்கொண்டு துக்கத்தையும் கஷ்டத்தையும் ஒருவருக்குச்
சொல்லிவிட்டு, சந்தியில் நின்று பத்திரிகைவிற்பவரது குழந்தைக்கு
விசேஷயோகத்தையும் சொன்னேன். அவர் யோகத்துக்குத் தகுந்த
படி 1500 வெள்ளி குதிரைப்பந்தயத்தில் பெற்றனர்.

இன்னும் சந்திரதெசையில் பிறந்தவர்களது ஜாதகத்தைப் பார்க்
கும்போது, ஓர் குடும்பத்திலுள்ள மகரமிதுனத்தில் பிறந்தோர்களது
ஜாதகங்களைக் கடத்திவிடமுடியாதிருந்தால்தான் நான் பார்க்கக் கையில்
எடுப்பது. அவர்களுக்கு இரண்டாம் ஏழாம் ஆதிபத்தியத்தின் தன்மை

யால் நோயும் வறுமையும் உண்டாகின்றன. மேடத்தில் பிறந்தோர்க்குச் சந்திரனுக்கென ஓர் பலனில்லை. மற்றைய கிரகங்களால் தொழில் ஏற்படுகிறது. இடபத்தில் பிறந்தோர்களுக்கும் மேடம்போல்தான் பலன் நடக்கிறது. சந்திரனது காலத்திலே கடகத்திற் பிறந்தோர்கள் அதிக சுபமடைகிறார்கள். சிங்கலக்கினத்திற் பிறந்தோரும் கடகத்தோருக்கடுக்கச் பலன் பெறுகிறார்கள். கன்னியிற் பிறந்தோர்க்குச் சந்திரன் கெட்டவன். துலாலக்கினத்தோர்க்குப் புதனோடு சம்பந்தப்பட்டால் சந்திரன் யோகம் கொடுக்கிறான். பெண்களுக்கு இது மிக விசேஷம். தனுலக்கினத்தோர்க்குச் சந்திரன் கெட்டவனல்ல. கும்பத்திற் பிறந்தோனுக்குப் புத்திகளுக்குத் தகுந்தபடி பலன் நடக்கும். முதலாவது புத்தியாகிய சுயபுத்தி குணம் செய்வதில்லையென்பது பொதுவாக யாரும் அறிவர். கடகசிங்கங்களில் பிறந்தோர்க்குச் சந்திரதெசையில் செவ்வாய்புத்தி வெகு நன்மை செய்யும். இராகு கேது புத்திகள் சுபத்தைச் செய்யமாட்டா. குருபுதசுக்கிரர்கள் சாமான்யமான சந்திரதெசையிலும் நற்பலன் செய்வார்கள். இவர்களும் சுபஸ்தானாதிபர் ஆயின் விசேஷபலன் உண்டு.

மிதுனத்திலும் கன்னியிலும் பிறந்தோர்களுக்குக் குருவும், குருவோடு சேர்ந்த வேறு கிரகங்களும் குருவின் பார்வைபெற்றோரும் கெட்டவர்கள். என் சிநேகிதர்களுள், பிரதிரூபப் படமெடுக்கும் வித்தையில் நிபுணரான மானிப்பாய் லோட்டன் ராஜசுந்தரம் அவர்களையும், கோப்பாய் அதிகார் நாகநாதமுதலியார் புத்திரரான நியாயதுரந்தரர் நாகநாதன் அவர்களையும் இளம் வயசில் குருதெசையில் இழந்துவிட்டேன் அல்லவா? இவர்கள் இருவரும் மிதுனலக்கினத்திற் பிறந்தவர்கள். இரண்டாதிபதியின் தீமைகளோடு, ஏழாதிபதி சந்திரனோடு சேர்த்துக் குருவின் பலன்களும் இங்கே கூறப்பட்டன. ஓர் காலத்து மாத்தறையிலுள்ள ஓர் சிங்களத் தலைவரின் குடும்பஜாதகப் புத்தகம் எம்மிடம் கொடுக்கப்பட்டது. அவருடைய புத்திரர்களில் ஒருவரது ஜாதகம் மகரலக்கினமும் சந்திரதெசையுமுள்ளது. அதைப் பார்த்துச் சொல்ல எனக்கு விருப்பமில்லாதபடியால் முதலாவது ஜாதகத்திலிருந்து மகரலக்கின ஜாதகம் வரை பார்த்துவிட்டு, மறுபடியும் வயசினால் மிக இளைய குழந்தையின் ஜாதகத்திலிருந்து வயசு ஏறிய ஜாதகங்களை மகரலக்கினம் வரை பார்த்து, அந்த ஜாதகத்தை மாத்திரம் பார்க்காது விட்டுவிட்டேன். நான் அதைப் பார்க்காததை அவர்களும் கவனிக்கவில்லை. மறுபடி அவர்கள் விரும்பியபோதும் நான் தாமதப்படுத்திவிட்டேன். பின்பு சில காலம் கழிந்தபின் அதைப் பார்க்கவேண்டியிருக்கவில்லை. ஏனென்றால், நான் பார்த்த சில மாதங்களுள் அந்த மகரலக்கின ஜாதகிக்குச் சுவாசாசயரோகம் உண்டாகி உயிர்துறந்துவிட்டார். இப்படி நான் சொல்லிவிட்டேன் என்று நீங்கள் அச்சமடையவேண்டாம். ஒவ்வொரு பிர



மாணத்திற்கும் புறநடை உண்டு. எப்போதும் மாரகக் கிரகங்கள் உயிரை மாத்திரம் எடுப்பவனல்ல. ஜாதகத்தில் குறைவடைந்த பாகத்தையே தாக்குவனவாம். அதை ஒருவர் ஆராய்ந்து தெரிந்துகொள்ள வேண்டும். தேகசுகம், கீர்த்தி, பொருள் ஏதாவது ஒன்றைத்தான் கிரகங்கள் எடுப்பன.

ஐந்து வருஷங்களின் முன் இலங்கையின் ஓர் மாகாணத்தின் ஏஜன்ற் அவர்களுக்கு உதவியாயிருந்த மேடலக்கினத்தில் பிறந்தவர் ஒருவரை ஓர் பாரிய நியாயதுரந்தரர் ஆபீசிற் சந்திக்க நேரிட்டது. அப்போது அவர் ஒரு காலில் மாத்திரம் பாதரக்ஷை அணிந்தவராயிருந்தார். "முதலியார் எப்படிச் சுகம்? தங்கள் காலில் என்ன?" என்று வினவினேன். "ஏதோ எனக்குப் பாதரக்ஷை உராய்ந்தது. வைத்தியரிடமிருந்து வருகிறேன்" என்றார். "உங்கள் தெசை என்ன? உங்கள் புத்தி என்ன?" என்று வினவினேன். "எனக்குக் குருதெசை, செவ்வாய்புத்தி" என்றார். "நீங்கள் மிகவும் கவனமாக இருக்கவேண்டும்!" என்று சொன்னேன்.

"எனக்கு உங்கள் தகப்பனாரைக்கூடத் தெரியும். நான் இந்த விஷயத்தில் மிகவும் ஆராய்ச்சிசெய்திருக்கிறேன். நீங்கள் என்ன 'பொன்னவர்க்குச் சேயொழியப் பொருந்தாரில்லை' என்பதை உத்தேசித்துச் சொல்லுகிறீர்களா? என்னிடத்தில் சில ஜோஸ்யப் புத்தகங்கள் இருக்கின்றன. உங்கள் தகப்பனார் கொடுத்த புத்தகங்களும் சில இருக்கின்றன. என்னுடைய புஸ்தகங்களுஞ் சேர்த்து உங்களுக்குத் தர இருக்கிறேன். நீங்கள் இன்னும் திருந்திக்கொள்ளவேண்டும்" என்று கூறினார். அவர், வீட்டுக்குப் போய் அதே தொடர்பாகக் காலிற் சூட்டிக்கு வைத்தியஞ்செய்து வைத்தியர்கள் கைவிடும் நிலையிலிருந்தார். என்னோடு சம்பாஷணை செய்ததன் காரணமாக மனம் தளர்ந்திருக்கிறாரென்று அவருக்கு வேண்டியவர்கள் எனக்குச் சொன்னார்கள். நான் போய் அவரைப் பார்த்துத் தேற்றி, அவர் சொல்லிய புத்தகங்களையும் பெற்றேன். செவ்வாய்புத்தி நீங்கிவிட்டமையால் இனித் தீங்கில்லை என்றும் சொன்னேன். சில நாளில் அவர் உயிர்துறந்தனர். அப்படியாயினும், வியாழதெசை செவ்வாய்புத்தியில் மேடலக்கினக்காரர் எல்லோரும் இறந்துபோகவேண்டுமென்று நான் சொல்லவில்லை. நடந்தேறிய பாரிய தீங்கை நான் இங்கே கூறினேன். கிரகங்களின் தீயவலிமைக்கேற்ப ஏற்றக்குறைச்சலாக மதித்துக்கொள்வது உங்கள்கடன்.

செவ்வாயும் வியாழனும் அந்தர்க்கதமாகும்போது இலங்கையின் வீரனை ஜோன் கொத்தளாவல, ஜெயிலில் தற்கொலை செய்தாரென வதந்தி. கேந்திராதிபத்தியதோஷத்தில் மிதுனகன்னிகளை நான் சேர்த்துச் சொல்லியிருந்தாலும், கன்னிக்கும் மிதுனத்துக்கும் சில வித்தியாசம் ஏற்படுத்தவேண்டியிருக்கிறது. இவ்விதமாகக் கன்னிலக்கினத்தில் ஜனித்த அனேக ஜாதகிகள் குருதெசையைத் தாண்டியிருப்பதை நான் பார்த்திருக்கிறேன்.

கேந்திராதிபத்தியதோஷத்தில் 1, 4, 7, 10 ஆகிய வீடுகளில் ஒவ்வொன்றும் ஏற்றமானபலனையுடையதென்றும், அதனால் தனு மீனத்தோர்க்குக் குருவால் அதிகதீங்கேற்படாதென்றும், மிதுனத்தில் ஜனித்தோர்க்குத்தான் விசேஷ தீங்கு உண்டாகுமென்றும், கன்னியிற் பிறந்தோர்க்கு மிதுனத்தோர்க்குப் போல் அதிக தீங்கு உண்டாகாதென்றும் நான் வற்புறுத்தவேண்டியிருக்கின்றது. இதைச் சுபக்கிரகக் கேந்திராதிபத்தியதோஷம் என்று நாம் சொல்லுவதால், இந்தக் குரு பாபதிருஷ்டிபெற்றால், அல்லது பாபசம்பந்தம் பெற்றால், அல்லது மறைவுஸ்தானங்கள் மேவினால் சுபத்தன்மை நீங்குவதோடு தோஷமும் குறைவடையும். இனி நாம் செவ்வாயை ஆராய்வாம்.

## மிருகசீரிடம், சித்திரை, அவிட்டம்
## செவ்வாய்மகாதெசை வருட 7.

| புத்தி | வருஷம் | மாதம் | நாள் | மொத்தம் வருஷம் | மொத்தம் மாதம் | மொத்தம் நாள் |
|---|---|---|---|---|---|---|
| செவ்வாய் | 0 | 4 | 27 | ... | ... | ... |
| ராகு | 1 | 0 | 18 | 1 | 5 | 15 |
| வியாழன் | 0 | 11 | 6 | 2 | 4 | 21 |
| சனி | 1 | 1 | 9 | 3 | 6 | 0 |
| புதன் | 0 | 11 | 27 | 4 | 5 | 27 |
| கேது | 0 | 4 | 27 | 4 | 10 | 24 |
| சுக்கிரன் | 1 | 2 | 0 | 6 | 0 | 24 |
| சூரியன் | 0 | 4 | 6 | 6 | 5 | 0 |
| சந்திரன் | 0 | 7 | 0 | 7 | 0 | 0 |

## செவ்வாய்மகாதெசை பலன்.

மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டத்திற் பிறந்தவர்களுக்குப் பிறக்கும்போது செவ்வாய்தெசை நடக்கும். செவ்வாய்தெசையோடு பிறப்பது விசேஷந்தான். செவ்வாய்தெசைக் குழந்தை துடியாட்டமுள்ளது. குழந்தையாக இருந்தால் பிதா, மாதா, சகோதரர், பராபரிப்போர் நற்பலன் அடைகிறார்கள். குழந்தை கடகசிங்கத்தில் ஜனித்திருந்தால் சேர்ந்தோர் எல்லோருக்கும் உயர்தரயோகமுண்டு. மேடலக்கினத்தோர்க்குஞ் செவ்வாய் தீங்கு செய்யாது. அட்டமாதிபத்தியதோஷம் இலக்கினாதிபத்தியத்தால் நீங்கிவிடும்.

இடபலக்கினத்திற் பிறந்தோர்க்குச் செவ்வாய் தீமை செய்வதில்லை. மிதுனகன்னியிற் பிறந்தவர்களுக்குத்தான் செவ்வாய் அதிக தீயபலன் செய்யும். துலாத்திற் பிறந்தோர்க்குச் செவ்வாய் மாரகதோஷம் செய்யாது. விருச்சிகலக்கினத்திற் பிறந்தோர்கள் செவ்வாயால் அதிக நன்மை பெறுவதில்லை ஆனால், வேறு சம்பந்தமில்லாது செவ்வாய் இவர்களுக்குத் தீமை செய்வதில்லை. தனுமீனத்தோர்க்குச் செவ்வாய் போதிய நன்மை செய்வதில்லை. மகாகும்பத்திற் பிறந்தோர்க்குத் திரிகோணாதிபத்திய சம்பந்தமின்றி யோகஞ் செய்வதில்லை.

... 29
" 17 ... 18.



மகரத்துக்குச் செவ்வாய் நன்மை செய்யவேண்டில் சுக்கிரசம்பந்தம் வேண்டும். கும்பலக்கினத்தோர்க்குச் செவ்வாயோடு சுக்கிரன் சேர்ந்தால் விசேஷயோகம் உண்டு. ஓர் யோகச்செவ்வாய் குழந்தைக்கு நடந்தால் பிதாவானவன் அந்த ஏழுவருஷத்துள் பெறவேண்டியதெல்லாம் பெற்று, வியாபாரப்போட்டி இருப்பின் ஜயித்து, தொழிலில் முதன்மையடைந்து, விரும்பியதெல்லாம் பெறுகிறான். சுபக்கிரகங்களிலும் பார்க்கப் பாபக்கிரகங்கள் வலிமைபெற்றால் விசேஷ நன்மையைச் செய்கிறார்கள். சாந்தமாக இருபது வருஷத்திற் சுக்கிரன் கொடுக்கத்தவறியதைச் செவ்வாய் தன் குறுகிய ஏழு வருஷத்தில் போட்டியினால் விசேஷமாகக் கொடுக்கும். கடகலக்கினத்திற் பிறந்தோர்க்குச் செவ்வாய்தெசையில் இராகுபுத்தி விரும்பியதெல்லாம் கொடுக்கும். செவ்வாய்தெசை வியாழபுத்தியில் கலகமுண்டாகும்.

இடபதுலாத்திற் பிறந்தோர்கள் சனிபுத்தியில் விசேஷ நன்மை பெறுவர். புதன்புத்தி கடகசிங்கத்திற் பிறந்தவர்களுக்கு நன்மை செய்யத் தவறுவதுமன்றி விசேஷ தீமைக்கும் காலாகும். தெசையால் ஏற்படவேண்டிய குணங்களையும் கெடுத்துவிடும். கன்னிமகரத்திற் பிறந்தோர்களுக்கல்லாது மற்றையோர்க்குக் கேதுபுத்தி அதிக தீமை செய்யும். கன்னிலக்கினத்தோன் செவ்வாயால் சுபம் பெறமாட்டான். ஆதலால், கேதுபுத்தியால் சுபம் ஏற்படுவது அரிது. சிங்கலக்கினத்திற் பிறந்தோன் செவ்வாய்தெசையில் சுக்கிரபுத்தியிலே அதிக நன்மை அடைவான். அவனுக்குச் சூரியபுத்தியும் நன்மையைச் செய்யும். செவ்வாய்தெசையில் மிகப் பிரதானமானது சந்திரபுத்தியே. கடகலக்கினத்திற் பிறந்தோர்க்குச் சந்திரன் க்ஷேமத்தைக் கொடுப்பான். பன்னிரண்டாதிபத்தியானாலும் சந்திரன் சிங்கலக்கினத்தோனுக்கு நன்மையைச் செய்வான். மீனவிருச்சிகத்தில் ஜனித்தோர்க்குச் செவ்வாயில் சந்திரபுத்தி வரும்போது முன் எட்டுப் புத்திகளிலும் ஏற்பட்ட கஷ்டங்களையும் நிவிர்த்திசெய்யும். செவ்வாய்தெசையில் ஒருவன் எப்போதும் யுத்தசன்னத்தனாக இருக்கிறான். இந்தச் செவ்வாய் இளம் வயசில் ஏற்ற காலத்தில் வந்தால் பந்தாட்டம் முதலியனவற்றிற்கும், கல்வியில் சித்திக்கும் உகந்தது.

கேதுவிற் பிறந்தோர் செவ்வாயில் இறக்கிறாரென ஓர் வதந்தி உளது. செவ்வாயின் ஆரம்பத்தில் அல்லது முடிவில் கேதுதெசையிற் பிறந்தோருக்குப் பொருள்நஷ்டம், உத்தியோகநீக்கம், துக்கத்தை நான் பார்த்திருந்தாலும், ஐந்தாம் தெசையாக வரும் நியாயத்தால் மாத்திரம் ஒருவருக்கு மரணத்தைக் கொடுத்ததை நான் பார்க்கவில்லை. செவ்வாயின் செயல் இல்லாமல் உடல்பொருட்களுக்குப் பந்தோபஸ்து ஏற்படாது. பட்டாளம், பொலிஸ்படை, போட்டாபோட்டி, பயிர்ச்செய்கை முதலியன இருக்கமாட்டா. சுரங்கவேலைகள் அற்றுப்போம். பிரதானமாகச் சகோதரபாவமும் ஏற்படாது. சாந்தி, வசீகரம், மாதுருநேசம், பிரியமான நடை இவற்றிற்குச் சந்திரன் எவ்வகையாக வேண்டப்படுமோ, அதுபோலச் செவ்வாய் ஒத்துழைப்புக்கும், போட்டிக்கும் வேண்டப்படுவதொன்றே.

யாழ்ப்பாணத்தவரான T. P. அண்ணாமலைப்பிள்ளை என்பவர் சென்னையில் உயர்தரப் பொலிஸ் அதிகாரியாய் இருந்தவர். செவ்வாய்தெசையில் பிறந்தவர். அவர் ஜாதகத்தைப் பார்ப்பதில் என் தந்தையார் அதிக அக்கறை எடுத்துக்கொண்டார். அதற்கு இரகஸ்யகாரணம், இருவரும் செவ்வாய் தெசையில் பிறந்திருந்தமையாலும், அந்தப் பொலிஸ்ஆபீஸர் என் தந்தையாரிலும் பார்க்கச் சில வருஷங்கள் முதிர்ந்தவராக இருந்தமையாலும், செவ்வாய்தெசையில் பிறந்தோர்களுக்கு நாலாகும் தெசையான சனியில் மாரகம் ஏற்படுவது வாஸ்தவந்தானே? என அறியும் நோக்கம் எனலாம். பிள்ளை அவர்களின் சந்திரன் கும்பத்தில் இருந்தது. என் தந்தையாருக்கு மகரத்தில் இருந்தது. பிள்ளைஅவர்கள் சென்னையில் பிரவேசபரீக்ஷையில் சித்திபெற்று, இந்தியாவில் உயர்தர உத்தியோகங்களில் அமர்ந்து, சனி தெசையில் இளைப்பாறி, புதன்தெசையில் நெடுநாள் வாழ்ந்தார். சாத்வீகமான கடகலக்கினத்து ஜனித்த என் தந்தையார் ஸத்ஜீவியமாக வாழ்ந்து, புதன்தெசை சுயபுத்தியில் கடகலக்கினத்தோரின் இயற்கைபோல் உலக வாழ்வை நீத்தார். தென்னிந்தியத் தமிழ்நூலான ஜாதகாலங்காரம் என்னும் ஜோஸ்யநூல் சுக்கிரதெசையில் பிறந்தோர்க்கு வியாழதெசையிலும், கேதுதெசையில் பிறந்தோர்க்குச் செவ்வாய்தெசையிலும், செவ்வாய் தெசையிற் பிறந்தோர்க்குச் சனிதெசையிலும், புதன்தெசையில் பிறந்தோர்க்கு இராகுதெசையிலும் மரணத்தைக் குறிக்கிறது. இவ் வாக்கியங்களை நான் சட்டைசெய்வதில்லை.

ஒருவன் சுக்கிரதெசையிற்பிறப்பானானால் ஏறக்குறைய அறுபதுவயதிற் குருதெசை ஆரம்பிக்கிறது. அறுபதுவயதுக்கும் எழுபத்தாறுவயதுக்கும் இடையில் மரணம் வருவது நூதனமல்ல. செவ்வாய்தெசையிற் பிறந்தோர் சனிதெசையைத் தாண்டுவது மேலே கூறப்பட்டிருக்கிறது. கேதுதெசையிற் பிறந்தோர் எல்லோர்க்கும் செவ்வாய்தெசையில் மரணத்தைக் கூறுவதானால் வேடிக்கையாகத்தான் இருக்கும். ஏனெனில், சிலர் அச்சுவினி மகம் மூல நக்ஷத்திரத்தில் நாலாம்பாதத்திற் பிறந்திருப்பாரானால் கேதுதெசையில் மிகச் சொற்பமிருந்திருந்தால் சுக்கிரதெசைக்கு இருபது வருஷமும், சூரிய தெசைக்கு ஆறுவருஷமும், சந்திரதெசைக்குப் பத்து வருஷமுமாக முப்பத்தாறுவயசின்மேல் மரணஞ் சம்பவிக்கவேண்டுமல்லவா? அப்போது அச்சுவினி, மகம், மூல நக்ஷத்திரத்திற் பிறந்தவர்களெல்லாம் பூச்சொரிவதுபோல் முப்பத்தாறுவயசில் இறந்துபோகவேண்டுமல்லவா? நான் விஜயஞ்செய்த நாடுகளில் கேதுதெசையிற் பிறந்த கணக்கில்லாதோர் செவ்வாய்தெசையிற் சீவியத்தை ஆரம்பித்து, சண்டமாருதம்போன்ற இராகுதெசையில் இப்போது சீவிக்கிறார்கள். இவர்களையெல்லாம் செவ்வாய்தெசை கொல்லவில்லை. மஹாத்மா காந்தியின் நக்ஷத்திரம் மகம் அல்லவா? அவர் செவ்வாய் தெசையைக் கடந்தது தேசஊழியத்தில் ஈடுபட்டமையால் என்பீர்களா?

அனுபவஜாதகம் முதற்பாகம் முற்றிற்று.